பாவங்களிலிருந்து! வியாதிகளிலிருந்து! பிரச்சனைகளிலிருந்து!

# இயேசு விடுவிக்கிறார்

JESUS REDEEMS MINISTRIES

மரம் : 37 கனி : 10 அக்டோபர் - 2016 சகோ. மோகன் சி. லாசரஸ் ஆண்டு சந்தா ₹ 50/- பிரதி ₹ 5/-




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உங்கள் சகோதரனிடமிருந்து...



**இ**ணையற்ற இயேசுவின் இன்ப நாமத்தில், உங்களுக்கு என் இனிய நல் வாழ்த்துக்கள்!

சிங்கப்பூர், மலேசியா தேச ஊழியங்களை கர்த்தர் ஆசீர்வதித்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

இஸ்ரேல் தேசம் சென்று, எருசலேமில் 12 மணி நேர ஜெபத்தையும், பெத்லகேமில் 9 மணி நேர ஜெபத்தையும் நடத்தி முடிக்க கர்த்தர் கிருபை செய்தார். அங்குள்ள யூத மக்கள் மத்தியிலும், பாலஸ்தீன மக்கள் மத்தியிலும் எழுப்புதல் உண்டாகும் என்று விசுவாசிக்கிறேன்!

கர்த்தர் கூட இருந்து, எங்களை நடத்தியதை உணர முடிந்தது. காரணம், உங்கள் ஜெபம்தான். நீங்கள் தினமும் எனக்காக ஜெபிக்கிற ஜெபத்தை நினைத்து, கர்த்தரைத் துதிக்கிறேன்! உங்கள் ஜெபத்தின் வல்லமையை என்னால் உணர முடிகிறது.

இந்த மாதத்தில் ஆந்திரா-**விஜயவாடாவில் 12 மணி நேர உபவாச ஜெபம்**, **மும்பையில் மேய்ப்பர்கள் எழுப்புதல் ஜெபக் கூடுகை**, **குஜராத், ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம்** போன்ற வெளி மாநிலங்களில் **மிஷனெரி ஊழியங்கள்**, **டெல்லியில் வாலிபர் மாநாடு** என்று, தொடர்ந்து ஊழியங்கள் இருக்கின்றன. இந்த மாதம், **உங்கள் ஜெபம் எனக்கு அதிகமாகத் தேவை.** ஜெபிப்பீர்களா?

இம்மாதம் (2016) **அக்டோபர் 30**ம் தேதி, இந்தியாவில் **8 இடங்களில்** 'MOUNT SINAI - 2016' என்று, **வாலிபர்**களுக்கான **உபவாச ஜெபக் கூடுகை**கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. இதற்காக **ஜெபியுங்கள்.**

ஒவ்வொரு மாதமும் கொழும்பு பட்டணத்தில் நடைபெற்று வரும் திறப்பின் வாசல் ஜெபத்தை தேவன் அற்புதமாக நடத்தி வருகிறார். கட்டாயமாக இந்த ஜெபத்தில் நீங்கள் கலந்து கொண்டு தேசத்திற்காக ஜெபிக்க அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். இலங்கை தேசத்திலே நாம் செய்து வருகிற ஊழியங்களுக்காக ஜெபித்து, கொடுத்து தாங்கி வருகிற உங்களை தேவன் அளவில்லாமல் **ஆசீர்வதிக்க ஜெபிக்கிறேன்.**

உங்கள் ஜெபத்தினாலும், நீங்கள் தியாகத்தோடு அனுப்பும் காணிக்கையினாலும் ஊழியத்தை கர்த்தர் அற்புதமாக நடத்தி வருகிறார். தேவனுடைய கூடாரம் மற்றும் மருத்துவமனைக் கட்டிட வேலைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இதற்காகக் கொடுத்துத் தாங்குகிற உங்களை, கர்த்தர் பல மடங்காக ஆசீர்வதிப்பாராக! **(லூக்கா 6:28).**

உங்கள் எல்லோருடைய ஜெபத்தினாலும், என் மனைவி பூரண சுகத்தோடு இருக்கிறாள். உங்கள் அன்பிற்காக, ஜெபத்திற்காக கர்த்தரைத் துதிக்கிறேன்!

**உங்களுக்காக**, உங்கள் குடும்பத்திற்காக **நாங்களும் ஜெபிக்கிறோம்.** சோர்ந்து போகாமல் **ஜெபியுங்கள்.** நம் தமிழ்நாட்டிற்காக, நம் இந்தியா தேசத்திற்காக **ஜெபியுங்கள்.** தமிழ்நாட்டில் ஆசீர்வாதமான மாற்றங்கள் உண்டாகப் போகிறது! விசுவாசத்தோடு தொடர்ந்து **ஜெபியுங்கள்.**

தமிழ்நாட்டின் **எழுப்புதலுக்கான ஜெபத்தை விட்டு விடாதீர்கள்.** சீக்கிரத்தில் எழுப்புதலைக் காண்போம். ஆவியில் நிறைந்து **ஜெபியுங்கள்.** ஆவியானவர் உங்களுக்கு உதவி செய்வார்.

கிருபை உங்களோடிருப்பதாக!

உங்கள் சகோதரன்,

Mohan C L.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயத்திலிருந்து... மன அழுத்தத்திலிருந்து...

வியாதிகளிலிருந்து... பாவத்திலிருந்து...



# நீங்கள் விடுதலையாவீர்கள்!

**"கர்த்தரே ஆவியானவர்; கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு."** 2 கொரி. 3:17.

**இ**ன்றைக்கு, ஏதோ ஒரு காரியத்தில் உங்களுக்கு ஒரு விடுதலை தேவையாக இருக்கிறது! ஒருவேளை, உங்கள் சரீரத்தில் ஒரு விடுதலை தேவையாக இருக்கலாம்! அல்லது, உங்களுடைய ஆத்துமாவில் ஒரு விடுதலை தேவையாக இருக்கலாம்! அல்லது, ஏதோ ஒரு பாவப் பழக்கத்திலிருந்து உங்களுக்கு ஒரு விடுதலை தேவையாக இருக்கலாம்!

"அது தவறு!" என்று உங்களுக்குத் தெரிகிறது. ஆனாலும், அதிலிருந்து விடுதலை பெற முடியாமல், நீங்கள் தவித்துக் கொண்டிருக்கலாம்! இப்படியாக ஏதோவொரு காரியத்தில், "இன்றைக்கு எனக்கொரு விடுதலை கிடைக்குமா?" என்கிற ஒரு ஏக்கத்தோடு நீங்கள் காணப்படலாம்!

"பயங்கரமான கடன் பிரச்சனையில் இருக்கிறேன்! அதிலிருந்து எனக்கு ஒரு விடுதலை வேண்டும்!', 'எனக்கு விரோதமாக நீதிமன்றத்தில் பொய்யான வழக்கு நடக்கிறது! அதிலிருந்து எனக்கு ஒரு விடுதலை வேண்டும்!" அல்லது, "எனக்குள் எப்பொழுதும் ஒரு விதமான பயம் இருக்கிறது! ஒரு கலக்கம் இருக்கிறது! ஒரு மன அழுத்தம் இருக்கிறது! என்னால் இரவில் நிம்மதியாகத் தூங்க முடியவில்லை! அதிலிருந்து எனக்கொரு விடுதலை வேண்டும்!" அல்லது, 'என் குழந்தைக்கு ஒரு பிரச்சனை! அதிலிருந்து என் குழந்தைக்கு ஒரு விடுதலை வேண்டும்!" என்று, ஏதோவொரு காரியத்தில் இன்றைக்கு உங்களுக்கு ஒரு விடுதலை தேவையாக இருக்கிறது!

அதை நீங்கள் வெளியே சொல்லா விட்டால் கூட, இப்போது நீங்கள் யோசித்துப் பார்த்தால், உங்களுக்கு ஒரு விடுதலை அவசியம் என்பதை நீங்கள் உணர்வீர்கள். ஒருவேளை, இன்றைக்கு நீங்கள் ஊழியம் செய்து கொண்டிருந்தால் கூட, உங்களுடைய அந்த ஊழியத்தின் பாதையில், உங்களுக்கு ஒரு விடுதலை தேவையாக இருக்கிறது!

இப்பொழுது **கர்த்தர்** உங்களுக்குச் சொல்கிறார்: **"பரிசுத்த ஆவியானவர் எங்கேயோ, அங்கே விடுதலை உண்டு!"**

இன்றைக்கு, உங்களுக்கு ஒரு விடுதலை உண்டாகப் போகிறது! இன்றைய நாள், உங்களுக்கு ஒரு விடுதலையின் நாள்! இன்றைய நாள், உங்கள் குடும்பத்திற்கு ஒரு விடுதலையின் நாள்! இன்றைய நாள், உங்கள் சரீரத்திற்கு ஒரு விடுதலையின் நாள்! உங்களுடைய வாழ்க்கையில், 'விடுதலை!' என்கிற ஒரு அற்புதம் நடக்கப் போகிறது.

அதை **நீங்கள் விசுவாசிக்க வேண்டும்**. இந்தச் செய்தியின் மூலமாக, கர்த்தருடைய ஆவியானவர் உங்களுக்குள் விசுவாசத்தைத் தூண்டி எழுப்புவார். ஆவியானவர் உங்களுக்குள் விசுவாசத்தைத் தூண்டி எழுப்பும்போது, உங்களுடைய விசுவாசத்தை கர்த்தர் மீது வைக்கும்படியாக, நீங்கள் அதில் கவனம் செலுத்த வேண்டும்.

ஏனென்றால், **விசுவாசம் இல்லாமல் கர்த்தரிடத்திலிருந்து எதையுமே பெற்றுக் கொள்ள முடியாது**. "இன்றைக்கு என்னுடைய விடுதலையின் நாள்! இன்றைக்கு எனக்கு ஒரு விடுதலை கிடைக்கப் போகிறது!" என்பதை, நீங்கள் **விசுவாசிக்க வேண்டும்.** நீங்கள் **விசுவாசித்தால்**, கர்த்தர் உங்களுக்கு ஒரு விடுதலையின் **அற்புதத்தைச் செய்வார்.**

ஆகவே, உங்களுடைய விசுவாசத்தை இன்றைக்கு நீங்கள் கர்த்தரிடத்தில் சொல்ல வேண்டும். "இன்றைக்கு எனக்கு விடுதலையின் நாள்!" என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்த்தரிடத்தில் சொல்லுங்கள். உங்களுடைய விசுவாசத்தை கர்த்தர் கனப்படுத்துவார். நீங்கள் உங்கள் இருதயத்தில், **முதலாவது விசுவாசிக்க வேண்டும்**. அந்த விசுவாசத்தில் நீங்கள் திடன் கொண்டு நிற்கும் போதுதான், அற்புதம் நடப்பதை உங்களால் பார்க்க முடியும்.

**ஆவியானவர் எங்கேயோ, அங்கே விடுதலை உண்டு!**



யார் இந்த ஆவியானவர்? "**கர்த்தரே ஆவியானவர்!**" என்று பரிசுத்த வேதாகமம் சொல்கிறது. கர்த்தர்தான் நமக்கு விடுதலை கொடுக்கிறவர்!

"பரலோகத்திலே சாட்சியிடுகிறவர்கள் மூவர். ஒருவர் '**பிதா!**' இன்னொருவர் '**வார்த்தை**யாகிய இயேசு கிறிஸ்து!' இன்னொருவர் 'பரிசுத்த **ஆவியானவர்!**'

அதாவது, "பிதா!', 'குமாரன்!', 'பரிசுத்த ஆவியானவர்!'. இந்த மூவரும் ஒன்றாக இருக்கிறார்கள். ஆனால் இந்த மூன்று பேரும், மூன்று கடவுள்கள் அல்ல." என்று வேத வசனம் மிகத் தெளிவாகச் சொல்கிறது. **(1 யோவான் 5:7).**

"அது எப்படி மூன்று பேரும் ஒன்றாக இருக்க முடியும்?" என்று கேட்டால், பரிசுத்த வேதாகமத்தில், '**பழைய ஏற்பாடு!**', '**புதிய ஏற்பாடு!**' என்று, இரண்டு பகுதிகள் இருக்கின்றன. இன்னும் கவனமாகப் பார்த்தால், பரிசுத்த வேதாகமத்தை மூன்று பகுதிகளாகப் பிரிக்க முடியும்.

ஒன்று, **பழைய ஏற்பாடு!** அதில், உலகத் தோற்றம்முதல், இயேசு கிறிஸ்துவின் பிறப்பு வரைக்கும் எழுதப்படும்போது, 'தேவனாகிய **கர்த்தர்!**' என்று சொல்லப்பட்டிருக்கிறது. **கர்த்தர்**, ஒருவரும் **சேரக் கூடாத ஒளியிலே வாசம் பண்ணுகிறவர்! (1 தீமோ. 6:16).**

மனிதரில் ஒருவரும் கண்டிராதவர்! காணக் கூடாதவர்! பிதாவாகிய கர்த்தரை யாராலும் பார்க்க முடியாது! அவ்வளவு பிரகாசமான மகிமையை உடையவர்! அவருக்கு ரூபம் கிடையாது! அவர் ஆவியாக இருக்கிறார்! அதனால்தான், "**தேவனை ஒருவனும் ஒருக்காலுங்கண்டதில்லை,...**" (யோவான் 1:18) என்று பரிசுத்த வேதாகமம் சொல்கிறது. ஆகவேதான் பழைய ஏற்பாட்டுக் காலத்தில், கர்த்தருடைய குரலை மட்டும்தான் ஜனங்கள் கேட்டார்கள்.

கர்த்தர் சீனாய் மலையில் இறங்கி வந்து பேசும்போது, அந்த இஸ்ரவேல் மக்கள் எல்லோரும் பயந்து நடுங்கிப் போய், **(யாத். 19:16)**, மோசேயைப் பார்த்து, "**...நீர் எங்களோடே பேசும், நாங்கள் கேட்போம்; தேவன் எங்களோடே பேசாதிருப்பாராக, பேசினால் நாங்கள் செத்துப்போவோம் என்றார்கள்.**" (யாத். 20:19). அந்த அளவிற்கு, கர்த்தருடைய மகிமை மகாப் பெரியது!

அவ்வளவு மகிமை நிறைந்த கர்த்தர், இந்த உலகத்தில் ஒரு சாதாரண மனிதனாக அவதரித்து வந்தார்! அப்பொழுதுதான், அவருக்கு '**இயேசு**' என்கிற பெயர் கொடுக்கப்பட்டது.

"**தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார்,...**" 1 தீமோ. 3:16.

பிதாவாக இருக்கிறவர்தான், குமாரனாகவும் நம்மைப்போல ஒரு சாதாரண மனிதனாக இந்த பூமியிலே வெளிப்பட்டார். அதனால்தான் இயேசு சொன்னார்: "**நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்.**" (யோவான் 10:30) என்று.

ஏன் இயேசு, 'பிதா!' என்று ஒருவர் இருப்பதைப்போல, "பிதா! பிதா!" என்று அடிக்கடி பேசினார்!" என்றால், அவர் முழுமையான ஒரு மனிதனாகவே மாறி, இந்த பூமியில் வந்து அவதரித்து, சிலுவையில் மரித்தால்தான், மனிதர்களுக்குப் பாவ மன்னிப்பு உண்டாகும்! மாறாக, ஒரு தெய்வமாக அவர் இந்த பூமிக்கு வந்து மரித்தால், பாவ மன்னிப்பு உண்டாக முடியாது.

ஆகவேதான், கர்த்தரே நம்மைப் போல ஒரு சாதாரண மனிதனாக இந்த பூமியில் அவதரித்து, ஜனங்கள் மத்தியில் உலாவி வந்தபோது, "பிதாவை நோக்கி வேண்டிக் கொள்ளுங்கள்..." என்று போதித்து, ஜனங்களை பிதாவுக்கு நேராகத் திருப்பினார்.

இயேசுவைக் குறித்து, **மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான்** போன்ற சுவிசேஷங்களில், கர்த்தர் ஒரு மனிதனாக வந்து இந்த உலகத்தில் உலாவியபோது, அவர் செய்த அற்புதங்கள், போதித்த போதனைகள், நமக்காக சிலுவையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரித்து உயிர்த்தெழுந்த காரியங்கள் எல்லாம் எழுதப்பட்டிருக்கிறது.

பிதாவாகிய தேவன், '**இயேசு**' என்கிற பெயரில் குமாரனாக வந்து, நமக்காக மரித்து உயிர்த்தெழுந்து, பரலோகத்திற்கு ஏறிப் போனார். **(அப். 1:9)**. பரலோகத்திலிருந்து வந்த இயேசு, உயிர்த்தெழுந்து, மீண்டும் அந்தப் பரலோகத்திற்கே கடந்து போன பிறகு, **பரிசுத்த ஆவியானவர்** இந்த பூமிக்கு வந்தார். **(அப். 2:1-3)**.

**"நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை** (பரிசுத்த ஆவியை) **அவர்** (பிதா) **உங்களுக்குத் தந்தருளுவார்."** (யோவான் 14:16) என்பதாக இயேசு சொன்னார்.

இயேசு இந்த உலகத்தில் வந்து, சிலுவையில் இரத்தம் சிந்தி மரித்து, மனுக் குலத்திற்கு இரட்சிப்பை சம்பாதித்து விட்டார்! அடுத்தபடியாக, இந்த உலகத்தின் ஜனங்கள் எல்லோரும் இரட்சிக்கப்பட, அவர்கள் பாவ உணர்வடைந்து மனந்திரும்பி, இயேசுவை ஏற்றுக் கொள்ளும்படியாகக் கிரியை செய்யப் போகிறவர், இந்தப் பரிசுத்த ஆவியானவர்!

பாருங்கள், ஒருவரும் சேரக் கூடாத ஒளியிலே வாசம் பண்ணுகிற அதே கர்த்தர்தான், இன்றைக்கு பரிசுத்த ஆவியாக இந்த உலகத்தில் வந்திருக்கிறார்!

இயேசுவைப் பார்க்கலாம்! அவரைத் தொடலாம்! அவருடைய குரலை நாம் கேட்கலாம்! ஆனால், அதே கர்த்தராகிய இயேசு பரிசுத்த ஆவியானவராக வரும்போது, அவரை நம் கண்களால் பார்க்க முடியாது. ஆனால், அவர் நம்மோடு பேசுவார்! அவர் நம்மை வழி நடத்துவார்! அவர் நம்மைத் தொடுவார்! அவர் நமக்குள் இருந்து செயல்படுவார்! அவர் வெறுமெனே ஒரு ஆவியல்ல. பரிசுத்த ஆவியானவர், ஒரு ஆள் தத்துவம் உள்ளவர்!

அதனால்தான், 'ஆவியானவர் திருவுளம் பற்றினார்!', 'ஆவியானவர் வழி நடத்தினார்!', 'ஆவியானவர் கண்டித்து உணர்த்தினார்!' என்றெல்லாம் பரிசுத்த வேதாகத்தில் வாசிக்கிறோம். பரிசுத்த ஆவியானவர், இயேசுவைப்போல ஒரு ஆள் தத்துவமுள்ளவர். அவரை நம் கண்களால் பார்க்க முடியாது. ஆனால், அவரை நம்மால் உணர முடியும்.

அப்படியானால், சர்வ வல்லமையும் பொருந்திய அதே கர்த்தர்தான், ஆவியானவராக இன்றைக்கு நம் மத்தியில் இருக்கிறார். திரித்துவத்தில் மூன்றாவது நபராக இருப்பவர்தான், இந்தப் பரிசுத்த ஆவியானவர். அதனால்தான், இந்தக் கடைசிக் காலம், "பரிசுத்த ஆவியானவரின் காலம்!" என்பதாகச் சொல்லப்படுகிறது.

கர்த்தருடைய வருகை வரைக்கும், இந்த ஆவியானவரின் கிரியைகளை இந்த உலகத்தில் பார்க்க முடியும். அவர்தான் இயேசுவினுடைய பிரசன்னத்தை நமக்கு உணரச் செய்கிறவர்! அவர்தான் ஜெபத்திலே நமக்கு உதவி செய்து, நம்மை ஜெபிக்க வைக்கிறவர்! அவர்தான் தம்முடைய ஊழியர்களைப் பயன்படுத்துகிறவர்! அவர்தான் அற்புதங்கள் நடக்கும்படியாகச் செய்கிறவர்! மொத்தத்தில், எல்லாமே பரிசுத்த ஆவியானவர்தான்! இன்றைக்கு அவர்தான் இந்த பூமியிலே பலமாகக் கிரியை செய்து கொண்டிருக்கிறார்.

இயேசுவை நமக்குச் சமீபமாகக் கொண்டு வந்து, அதை உணர வைக்கிறவர் பரிசுத்த ஆவியானவர்! அதாவது, இயேசுவினுடைய பிரசன்னத்தை நமக்கு சமீபமாகக் கொண்டு வருகிறவர் பரிசுத்த ஆவியானவர்! அதனால்தான், "கர்த்தரே ஆவியானவர்!" என்று பரிசுத்த வேதாகமம் சொல்கிறது.

சூரியன், இந்த பூமியிலிருந்து எத்தனையோ ஆயிரக்கணக்கான மைல்கள் தூரத்தில் இருக்கிறது. அதனுடைய அனல் கக்கும் பிரகாசத்தின் மத்தியில், அந்த சூரியனை நடு மத்தியான நேரத்தில் ஒரு நிமிடம் கூட யாராலும் பார்க்க முடியாது. ஆனால், அந்த சூரியனுடைய வெளிச்சத்தை நம்மால் பார்க்க முடியும். அந்த சூரியனால் உண்டாகிற உஷ்ணத்தை நம்முடைய சரீரத்தில் உணர முடியும்.

அதே போலத்தான், ஒருவரும் சேரக் கூடாத ஒளியிலே வாசம் பண்ணுகிற மகாப் பிரகாசமான சூரியனைப் போன்றவர்தான் கர்த்தர்! அவரிலிருந்து வெளிப்பட்ட ஒரு வெளிச்சம், இயேசு கிறிஸ்து! அவர் மூலமாக நமக்குள் வரக் கூடிய வல்லமையின் தொடுதலைக் கொடுக்கக் கூடியவர், பரிசுத்த ஆவியானவர்!

ஒரே சூரியன்தான்! ஆனால், அதில் மூன்று விதமான காரியங்களை நாம் பார்க்கிறோம். அதேபோல, கர்த்தர் ஒருவர்தான்! ஆனால் அவருடைய செயல்பாடுகள் மூன்று விதமானது. பிதாவாகிய தேவனும் அவர்தான்! வார்த்தையாக வெளிப்பட்ட இயேசு கிறிஸ்துவும் அவர்தான்! பரிசுத்த ஆவியானவராக நமக்குள் இன்றைக்கு செயல்பட்டுக் கொண்டிருப்பவரும் அவர்தான்! அதனால்தான், **"...இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள்;"** (1 யோவான் 5:7) என்று, கர்த்தருடைய வார்த்தை நமக்கு மிகத் தெளிவாகச் சொல்கிறது.

நாம் வாழ்கிற இந்தக் காலம், பரிசுத்த ஆவியானவரின் காலம்! அவரைக் குறித்து வேத வசனம் இப்படியாகச் சொல்கிறது: **"...கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு."** **2 கொரி. 3:17.**

பரிசுத்த ஆவியானவர், வல்லமையின் ஆவியானவர்! பரிசுத்த ஆவியானவருக்குள் இருக்கிற வல்லமை இருக்கிறதே, அது பயங்கரமான வல்லமை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வல்லமைக்கு முன்பாக வேறு எந்தவொரு வல்லமையும் நிற்கவே முடியாது! அப்படிப்பட்ட ஆவியானவருடைய வல்லமை நமக்குள் வரும்போது, நமக்கு விடுதலை உண்டாகிறது!

இப்பொழுது பரிசுத்த ஆவியானவர் உங்கள் அருகில் அசைவாடிக் கொண்டிருக்கிறார். அவருடைய பிரசன்னம் உங்களைச் சுற்றிலும் இருக்கிறது.

சமீபத்தில், நாகர்கோவில் பட்டணத்தில் மாணவர்களுக்காக ஒழுங்கு செய்திருந்த ஒரு கூட்டத்தில் தேவ செய்தியைக் கொடுத்து, ஜெபிக்கும்படியாக என்னை அழைத்திருந்தார்கள். அந்தக் கூட்டத்திற்கு, சுமார் 3,000க்கும் அதிகமான மாணவ – மாணவியர்கள் வந்திருந்தார்கள்.

செய்தி வேளையில் கொடுக்கப்பட்ட கர்த்தருடைய வார்த்தையை, அனைவரும் அசையாமல் அப்படியே உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருந்தார்கள். அந்தக் கூட்டம் முடியும் வரைக்கும் அவர்கள் அசையவே இல்லை. ஜெப வேளையில், தேவ சமூகத்தில் அழுது, தங்களை கர்த்தருக்கு ஒப்புக் கொடுத்து ஜெபித்தார்கள்.

அங்கிருந்த ஆசிரியர்கள் எல்லோருமே மிகவும் ஆச்சரியப்பட்டு, "இவர்களை அடக்குவதே மிகவும் கஷ்டம். ஒரு அரை மணி நேரம் கூட இவர்களை ஒரே இடத்தில் உட்கார வைத்துப் பார்ப்பது மிகவும் கஷ்டம். ஆனால் கொஞ்சம் கூட ஆடாமல், அசையாமல் இவ்வளவு நேரம் ஒரே இடத்தில் உட்கார்ந்து, உங்கள் செய்தியைக் கேட்டு, ஒப்புக் கொடுத்து ஜெபிக்கிறார்களே! இப்படிப்பட்ட ஒரு காட்சியை, இதுவரை நாங்கள் பார்த்ததே இல்லை. இது எப்படி நடக்கிறது?" என்று என்னிடத்தில் கேட்டார்கள்.

அப்பொழுது நான் அவர்களிடத்தில், "என்னிடத்தில் ஒன்றுமில்லை. பரிசுத்த ஆவியானவர்தான் இதைச் செய்தார்!" என்று சொன்னேன்.

பாருங்கள், பரிசுத்த ஆவியானவர்தான் அப்படிப்பட்ட காரியங்களைச் செய்கிறார். அவர் ஒருவரால் மட்டுமே அப்படிப்பட்ட காரியங்களைச் செய்ய முடியும்! நம்முடைய கண்களால் அவரைப் பார்க்க முடியாது. ஆனால் அவரை நம்மால் உணர முடியும். அதுதான் 'தேவப் பிரசன்னம்!' என்பது.

நாம் வெயிலில் நின்றால், சூரிய வெளிச்சத்தின் உஷ்ணத்தை நாம் எப்படி உணர்கிறோமோ, அப்படியே தேவனுடைய பிரசன்னத்திற்குள் நாம் வரும்போது, அந்த ஆவியானவரின் பிரசன்னத்தை நம்மால் உணர முடியும். அதுதான் ஆவியானவருடைய வல்லமை! ஆவியானவருடைய பிரசன்னம்! அந்த ஆவியானவருக்கு விடுதலை கொடுக்கிற வல்லமை உண்டு!

**ஆவியானவர் எங்கேயோ, அங்கே விடுதலை உண்டு!**

சாத்தான் எப்பொழுதுமே மனிதர்களை அடிமைப்படுத்துவான். "கர்த்தருக்கும், சாத்தானுக்கும் இடையே உள்ள வித்தியாசம் என்ன?" என்றால், சாத்தான், தன்னை ஒரு தெய்வமாகக் காண்பித்துக் கொள்வான். ஆனால், அவன் மனுக் குலத்தை பயமுறுத்தி, சிறுமைப்படுத்தி, அடிமையாக்கி வைத்து விடுவான். அதே சமயத்தில், அடிமைத்தனத்திலிருந்து மனுக் குலத்திற்கு விடுதலை கொடுக்கிறவர் கர்த்தர். அந்த விடுதலை, ஆவியானவர் மூலமாகத்தான் நமக்கு உண்டாகிறது.

"ஆவி!', 'ஆத்துமா!', 'சரீரம்!' என்கிற 3 பகுதிகளை உடையவன்தான் மனிதன்." என்பதாக, கர்த்தருடைய வசனம் சொல்கிறது. **(1தெச. 5:23).**

**முதலாவதாக**, ஒரு மனிதனுடைய சரீரத்தை, நம்முடைய கண்களால் பார்க்க முடியும்.

**இரண்டாவதாக**, அந்த சரீரத்திற்குள், கர்த்தர் தந்த, 'ஆவி!' என்கிற ஒன்று இருக்கிறது. அதை நம்மால் பார்க்க முடியாது. அந்த ஆவிதான், "உள்ளான மனிதன்!" என்று பரிசுத்த வேதாகமம் சொல்கிறது. அந்த ஆவி ஒரு மனிதனுக்குள் இருந்தால்தான், அவனால் உயிரோடு இருக்க முடியும். அவனுக்குள் இருக்கிற அந்த ஆவி போய் விட்டது என்றால், எல்லாமே முடிந்து விட்டது! அதாவது, "அந்த மனிதன் செத்துப் போய் விட்டான்!" என்று அர்த்தம்.

**மூன்றாவதாக**, ஒரு மனிதனுக்குள் 'ஆத்துமா!' என்கிற ஒன்று இருக்கிறது. இது மிருகங்களுக்கோ, பறவைகளுக்கோ கிடையாது. மனிதனுக்கு மட்டும்தான் ஆத்துமா உண்டு!



**"தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்." (ஆதி. 2:7).**

"குரங்கிலிருந்துதான் மனிதன் உண்டானான்!" என்று சொன்ன, 'டார்வின்' என்கிற ஒரு விஞ்ஞானி, தன்னுடைய கடைசிக் காலத்தில், "ஐயோ, நான் பாவம் செய்து விட்டேன்! உலக மக்கள் மத்தியில் நான் ஒரு தவறான விதையை விதைத்து விட்டேன்! தேவனால் உண்டாக்கப்பட்ட மனிதனை, "குரங்கிலிருந்துதான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தான்.'' என்று, ஒரு வீணான கண்டுபிடிப்பை பொய்யாய் சொல்லி, மக்களை ஏமாற்றி விட்டேன். இயேசுவே, என்னை மன்னியும்.'' என்று சொல்லி, கர்த்தரிடத்தில் மன்னிப்புக் கேட்டு, மனந்திரும்பினாராம்!

பாருங்கள், அவர் மனந்திரும்பி, கர்த்தரிடத்தில் மன்னிப்புக் கேட்டதை எல்லாம் விட்டு விட்டார்கள். அவர் சொன்ன, "குரங்கிலிருந்துதான் மனிதன் வந்தான்." என்கிற வார்த்தையை மட்டும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

"இந்த உலகம் எப்படி உண்டாக்கப்பட்டது? மனிதன் எப்படி உண்டாக்கப்பட்டான்? இன்றைக்கு உலகத்தில் என்னென்ன காரியங்கள் நடந்து கொண்டிருக்கின்றன? இனிமேல் என்னென்ன காரியங்கள் எல்லாம் சம்பவிக்கப் போகின்றன?" என்று, சகலவற்றையும் குறித்து மிகத் தெளிவாகப் பேசிக் கொண்டிருக்கிற ஒரே ஒரு புத்தகம், பரிசுத்த வேதாகமம் மட்டுமே!

பரிசுத்த வேதாகமம் ஒன்றில்தான், உண்மையான சத்தியங்கள் அடங்கி இருக்கின்றன. அதில் சொல்லப் பட்டிருக்கிறவைகள்தான் உண்மை! பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப் பட்டிருக்கிறபடிதான், இந்த உலகத்தில் எல்லாக் காரியங்களும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ஆக, பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறபடி, கர்த்தர் ஒரு மனிதனை சிருஷ்டிக்கும்போது, அந்த மனிதனுக்குள் ஒரு ஆத்துமாவை வைக்கிறார். அந்த ஆத்துமாதான் கர்த்தரைத் தேடுகிறது. அந்த ஆத்துமாதான் தேவ சமாதானத்தைப் பெற்றுக் கொள்கிறது. அந்த ஆத்துமாவில்தான் கர்த்தர் வாசம் பண்ணுகிறார். அதைத்தான், 'இருதயம்!' என்று சொல்கிறோம்.

ஜெப வேளையில், "இயேசுவே, என் இருதயத்திற்குள் வாரும்." என்று சொல்லி, நாம் கர்த்தரை நோக்கிக் கூப்பிடும்போது, "இயேசுவே, என் ஆத்துமாவிற்குள் வந்து வாசம் செய்யும்." என்று அர்த்தம். "அந்த ஆத்துமா எப்படி இருக்கும்?" என்று நமக்குத் தெரியாது. அதைக் கண்களால் யாரும் பார்த்ததுமில்லை. ஆனால், அதை நம்புகிறோம். நமக்குள் நித்திய ஜீவனைக் கொண்டு வருகிற அந்த அனுபவத்தை உணர்வது, நம்முடைய ஆத்துமாவில்தான். நாம் பாவம் செய்யும்போது, அந்த ஆத்துமா கறைபடும். அந்த ஆத்துமா கறைபடும்போது, கர்த்தரோடு நமக்கு உள்ள தொடர்பு அற்றுப் போகும். ஏனென்றால், அந்த ஆத்துமாவில்தான் கர்த்தர் வந்து வாசம் பண்ணுகிறார். "இருதயத்தில் வாசம் பண்ணுகிறார்." என்றால், "கர்த்தர் நம்முடைய ஆத்துமாவிலே வந்து வாசம் பண்ணுகிறார்." என்று அர்த்தம். இந்த ஆத்துமாவில்தான், 'உணர்வுகள்', 'சந்தோஷம்', 'துக்கம்', 'கோபம்', 'எரிச்சல்' போன்ற எல்லாமே உண்டாகிறது. ஆக, ஒரு மனிதன், 'ஆவி!', 'ஆத்துமா!', 'சரீரம்!' என்கிற மூன்று பகுதிகளை உடையவனாக இருக்கிறான்.

இந்த மூன்று பகுதிகளிலும் விடுதலை இருந்தால்தான், ஒரு மனிதனுக்குள் பூரண சமாதானம் காணப்படும். இதில் ஒரு பகுதி பாதிக்கப்பட்டால் கூட, சமாதானம் இருக்காது. சிலருக்கு, அவர்களுடைய ஆத்துமா இரட்சிக்கப்பட்டிருக்கும். ஆனால், அவர்களுடைய ஆவியில் ஏதாவதொரு பிரச்சனை இருக்கும்.

சிலருக்கு, அவர்களுடைய ஆத்துமாவிலே இரட்சிப்பின் சந்தோஷம் இருக்கும். ஆனால், அவர்களுடைய சரீரத்தில் ஏதாவதொரு பிரச்சனை இருக்கும். அப்படிப்பட்ட நிலைமையில் இருப்பவர்களால், ஒரு முழுமையான சந்தோஷத்தை அனுபவிக்கவே முடியாது.

"இரட்சிக்கப்பட்டு விட்டேன்! ஆனால் என்ன செய்வது?" என்று சொல்லி, மிகவும் சலித்துக் கொள்வார்கள். இரட்சிக்கப்பட்ட பிறகும் கூட, ஏன் ஒரு முழுமையான சந்தோஷம் அவர்களுக்கு இல்லை? அவர்களுடைய சரீரம் பாதிக்கப்பட்டிருக்கிறது! அவர்களுடைய ஆவியில் ஒரு பாதிப்பு இருக்கிறது! அவைகளிலும் விடுதலை பெற்றால்தான், ஒரு பூரண சந்தோஷம் உண்டாக முடியும். அந்த விடுதலையைத் தருகிறவர், பரிசுத்த ஆவியானவர்! ஆகவே, 'ஆவி!', 'ஆத்துமா!', 'சரீரம்!' ஆகிய இந்த மூன்று பகுதிகளிலும் நமக்கு விடுதலை வேண்டும்.

## ஆத்துமாவில் விடுதலை தருகிறார்!

முதலாவது, ஆத்துமாவில் ஒரு விடுதலை வேண்டும். நாம் இரட்சிக்கப்படும்போது என்ன நடக்கிறது? "இயேசுவே, என் பாவத்தை மன்னியும், உம்முடைய இரத்தத்தினால் என் இருதயத்தைக் கழுவும்." என்று சொல்லி நாம் ஜெபிக்கும்போது, இயேசுவினுடைய இரத்தம் நம்முடைய ஆத்துமாவைக் கழுவுகிறது. **(1 யோவான் 1:7).** பாவக் கறை படிந்திருந்த நம்முடைய ஆத்துமாவை, அதாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்முடைய இருதயத்தை இயேசுவின் இரத்தம் கழுவியவுடனே, நம் உள்ளத்திற்குள் ஒரு இரட்சிப்பின் சந்தோஷம் வருகிறது. அந்தச் சமயத்தில், வெளிப் பிரகாரமாக நமக்குள் உண்டாயிருந்த பாவ சந்தோஷங்கள் அனைத்தும் உடனே போய் விடும். அதாவது, வெளிப் பிரகாரமாக நமக்குள் ஒரு மாற்றம் உண்டாகி விடும்.

ஆனால், நம்முடைய உள்ளான மனிதனுக்குள் சில பரம்பரை சுபாவங்களான 'பெருமை!', 'பொறாமை!', 'எரிச்சல்!', 'கோபம்!' போன்ற பாவ சுபாவங்கள் இருக்கும்.

"இது தவறு, இது வேண்டாம்.' என்று நினைக்கிறேன். ஆனால் அதைச் செய்து விடுகிறேனே! 'கோபப்படக் கூடாது.' என்றுதான் நினைக்கிறேன். ஆனால், கோபம் வந்து விடுகிறதே! 'இதைச் செய்யக் கூடாது.' என்றுதான் நினைக்கிறேன். ஆனால் அதைச் செய்து விடுகிறேனே! 'இதைப் பார்க்கக் கூடாது.' என்றுதான் நினைக்கிறேன். ஆனால் அதை நான் பார்த்து விடுகிறேனே! 'வீட்டில் எல்லோருடனும் அன்பாக இருக்க வேண்டும். யாரிடமும் கோபப்படக் கூடாது.' என்றுதான் நான் நினைக்கிறேன். ஆனால் யாரிடமாவது கோபப்பட்டு விடுகிறேன்!

நான் இரட்சிக்கப்பட்டிருக்கிறேன்! வேதாகமத்தை வாசிக்கிறேன்! ஜெபம் பண்ணுகிறேன்! ஆனாலும் அவ்வப்போது எனக்குக் கோபம் வந்து விடுகிறது! எனக்குள் பெருமை வந்து விடுகிறது!" என்று சொல்கிறீர்களா? அது, உங்களுக்குள் இருக்கிற ஜென்ம சுபாவம். இந்த ஜென்ம சுபாவம் இருக்கிறதே, அது உங்களுக்குள்ளேயே இருக்கிறது!

அதிலிருந்து உங்களுக்கு ஒரு விடுதலை வேண்டும். அதற்குத்தான் பரிசுத்த ஆவியின் அக்கினி இருக்கிறது. பரிசுத்த ஆவியானவர், ஒரு அக்கினியாக உங்களுக்குள் இறங்கி விட்டால், உங்களுக்குள் இருக்கிற அந்த ஜென்ம சுபாவத்தை மாற்றி விடுவார். உங்களால் விட முடியாத பாவ சுபாவத்திலிருந்து, உங்களுக்கு ஒரு விடுதலையைக் கொடுத்து விடுவார்.

இரட்சிக்கப்பட்ட தேவ மனிதனாகிய பரிசுத்த **பவுல்**, "நான் எதைச் 'செய்யக் கூடாது' என்று நினைக்கிறேனோ, அதையே செய்து விடுகிறேன். 'கோபப் படக் கூடாது.' என்று நினைக்கிறேன், ஆனால் கோபப்பட்டு விடுகிறேன். 'இச்சிக்கக் கூடாது.' என்று நினைக்கிறேன். ஆனால், இச்சித்து விடுகிறேன். எதை 'வேண்டாம்' என்று நினைக்கிறேனோ, அதைச் செய்து விடுகிறேன்! நான் பரிசுத்தமாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறேன். ஆனால், பாவம் செய்து விடுகிறேன்! நான் விரும்பாததை நானே செய்து விடுகிறேன். என்ன செய்வது? **நிர்ப்பந்தமான மனுஷன் நான்! இந்த மரணசரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்?"** (ரோமர் 7:24) என்று சொல்லி கதறுகிறார்.

அதே பவுல்தான், **"கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே."** (ரோமர் 8:2) என்று முழங்குகிறார்.

இன்றைக்கு நீங்களும் கூட, "ஏற்கெனவே நான் இரட்சிக்கப்பட்டு விட்டேன். இயேசுவின் இரத்தம் என்னைக் கழுவி விட்டது. ஆனால், இந்த ஜென்ம சுபாவத்தில் இருந்து, எனக்கு இன்னும் ஒரு விடுதலை கிடைக்கவில்லையே! யார் என்னை இவைகளிலிருந்து விடுதலையாக்குவார்?" என்று அங்கலாய்க்கிறீர்களா?

**கலங்காதீர்கள்!** அவைகளிலிருந்து உங்களை விடுதலையாக்க ஒருவர் இருக்கிறார். அவர்தான் பரிசுத்த ஆவியானவர்!

முதலாவது, உங்களுக்குள் இருக்கிற, 'சுயம்!' என்கிற பாவத்தை பரிசுத்த ஆவியானவர் சுட்டெரிப்பார். 'கோபம்!', 'எரிச்சல்!', 'இச்சை!' போன்ற உங்களுக்குள் காணப்படுகிற ஜென்ம சுபாவங்களை ஆவியானவர் சுட்டெரித்து, உங்களை ஒரு புது மனிதனாக மாற்றி விடுவார்!

இயேசுவோடு கூட இருந்த, அவருடைய சீஷர்களுடைய வாழ்க்கையைப் பாருங்கள்.



இயேசு அவர்களைக் கூப்பிட்டபோது, தங்கள் தொழிலை எல்லாம் விட்டு விட்டு, தங்கள் சொந்தக் குடும்பத்தை விட்டு விட்டு, அப்படியே அவரைப் பின்பற்றி வந்து விட்டார்கள்! அப்படியானால், "அவர்கள் எவ்வளவு தியாகம் செய்தவர்கள்!" என்று எண்ணிப் பாருங்கள்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்குப் பிறகு, தங்கள் சொந்த வீட்டிற்குக்கூட அவர்கள் திரும்பிப் போகவே இல்லை! மூன்றரை வருடங்கள் இயேசுவோடு கூடவே இருந்தார்கள்.

அப்படியாக தியாகத்தோடு வந்து, தன்னோடு இருந்த அவர்களுக்கு இயேசு எந்தவொரு வசதியையும் செய்து கொடுக்கவில்லை!

இயேசுவினுடைய ஊழியத்தின் முடிவில், அவர் சிலுவையில் அறையப்படப் போகிற நேரத்தில், அவருடைய சீஷர்கள், "யார் பெரியவன்?" என்று சொல்லி, தங்களுக்குள்ளே சண்டை போட்டார்கள். பாருங்கள், இயேசு அவர்களை ஊழியத்திற்கு அனுப்பியபோது, பிசாசை துரத்தினார்கள்! வியாதியஸ்தரை எல்லாம் குணமாக்கினார்கள்! ஆனால், அவர்களுக்குள் இருந்த 'பெருமை' போகவில்லை! 'பதவி ஆசை' போகவில்லை! அதாவது, அவர்களுக்குள் ஜென்ம சுபாவம் இருந்தது.

ஆனால், பெந்தெகோஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவர் அவர்கள் மீது வல்லமையாக இறங்கிய பிறகு, அவர்களுக்குள் எந்த விதமான சண்டையும் இல்லை. இயேசுவோடு இருக்கும்போதுகூட அவர்கள் சண்டை போட்டார்கள். ஆனால், பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்குள் வந்த பிறகு, "நம்மில் யார் பெரியவன்?" என்கிற பேச்சே அவர்களுக்குள் எழவில்லை. "யாருக்கு என்ன பதவி?" என்கிற எண்ணமே அவர்களுக்கு உண்டாகவில்லை.

காரணம் என்ன? ஆவியானவர் இறங்கி, அவர்களுக்குள் இருந்த அந்த ஜென்ம சுபாவத்தை எல்லாம் சுட்டெரித்துப் போட்டு, ஒரு தெய்வீக சுபாவத்தை அவர்களுக்குள் உண்டாக்கி விட்டார். இதுதான் ஆவியானவர் செய்கிற முதல் வேலை.

இன்றைக்கு அதே ஆவியானவர், நமக்குள் காணப்படுகிற ஜென்ம சுபாவங்களை எல்லாம் மாற்றி, நம்முடைய ஆத்துமாவிலே ஒரு விடுதலையைக் கட்டளையிட வல்லவராக இருக்கிறார்.

**"ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்;" (கலா. 5:22,23)** என்கிற ஆவிக்குரிய கனியைப் பற்றி பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஒன்பது வகையான ஆவிக்குரிய கனி நமக்குள் உருவாக வேண்டும்.

மாம்சத்தின் கிரியைகளைப் பற்றி பரிசுத்த வேதாகமம் சொல்லும்போது, **"மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன; அவையாவன: விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே;" (கலாத்தியர் 5:19 – 21)** என்பதாகச் சொல்கிறது.

இந்த மாம்சத்தின் கிரியைகள் எல்லாம் அழிக்கப்பட்டால்தான், ஆவியின் கனி உருவாக முடியும். இந்த மாம்சத்தின் கிரியைகளை அழிப்பவர் யார்? அவர்தான் பரிசுத்த ஆவியானவர்!

"இயேசுவே, என் மாம்சத்தின் கிரியைகள் அழிய வேண்டும். என்னுடைய ஜென்ம சுபாவம் அழிய வேண்டும். எனக்குள் இருக்கிற இந்தப் பாவ சுபாவங்கள் அழிய வேண்டும்." என்று சொல்லி, நாம் கர்த்தரிடத்தில் கேட்கும்போது, பரிசுத்த ஆவியின் அக்கினி நமக்குள் இறங்கி, அவைகளை எல்லாம் சுட்டெரித்துப் போடும்.

அதற்குப் பிறகு, நமக்குள் ஆவிக்குரிய கனி உருவாகிறது. கிறிஸ்துவின் சுபாவம் உருவாகிறது. ஆகவே முதலாவதாக, நம்முடைய ஆத்துமாவில் ஒரு விடுதலை வர வேண்டும். அதைத் தருகிறவர்தான் பரிசுத்த ஆவியானவர்!

# சரீரத்தில் விடுதலை தருகிறார்!

இரண்டாவதாக, பரிசுத்த ஆவியானவர் நம்முடைய சரீரத்தில் விடுதலை தருகிறார். சிலர், தங்கள் ஆத்துமாவில் இரட்சிக்கப்பட்டிருப்பார்கள். ஆனால், அவர்களுடைய சரீரத்தில் ஏதாவது ஒரு வியாதி இருக்கும்!

"எலும்பில் பிரச்சனை! நரம்பில் பிரச்சனை! பேச முடியவில்லை! நடக்க முடியவில்லை! கர்த்தர் மீது அன்பு இருக்கிறது. இரட்சிக்கப்பட்டிருக்கிறேன்! எனக்குள் விசுவாசம் எல்லாம் இருக்கிறது! ஆனால், என் சரீரத்தில் இந்த வியாதி, வேதனை இருக்கிறது." என்று சிலர் சொல்வார்கள். ஒன்றை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். பிசாசானவன்தான் நம்முடைய சரீரத்தை நோய்களினாலோ, அல்லது ஏதோவொரு பெலவீனத்தினாலோ தாக்குகிறான். மனிதனுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரம்பு மண்டலத்தைத் தாக்கி, பெலவீனப்படுத்தி விடுகிறான். எலும்புகளைத் தாக்கி, நடக்க முடியாமல் செய்து விடுகிறான். திமிர்வாத நோயினாலோ, அல்லது முடக்கு வாத நோயினாலோ கை, கால்களை முடக்கி விடுகிறான். சிறுநீரகத்தைத் தாக்கி, செயலற்றுப் போகப் பண்ணி விடுகிறான். இருதயத்தைத் தாக்கி, பெலவீனப்படுத்தி விடுகிறான்.

இப்படியாக, பிசாசானவன்தான் எல்லா வியாதிகளுக்கும் பின்பாக இருந்து கொண்டு, கிரியை செய்கிறான். ஏதோவொரு விதத்தில் பிசாசானவன் நம்முடைய சரீரத்தைத் தாக்கி, பெலவீனப்படுத்தி விடுகிறான். அப்படியானால், நம்முடைய சரீரத்திலும் ஒரு விடுதலை தேவை.

இன்றைக்கு வியாதியின் பிடியிலிருந்து, பெலவீனத்தின் பிடியிலிருந்து உங்களுக்கு ஒரு விடுதலை தேவை. **ஆவியானவர் எங்கேயோ, அங்கே விடுதலை உண்டு!**

பரிசுத்த ஆவியானவர் உங்களுடைய சரீரத்திலே இறங்கி வரும்போது, "...**ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்.**" (ரோமர் 8:11).



"செத்துப் போன சரீரத்திற்குள்ளே உயிரைக் கொடுக்கிற ஆவியானவர், நம்முடைய சரீரத்தையும் உயிர்ப்பிப்பார்." என்பதாக கர்த்தருடைய வார்த்தை சொல்கிறது.

இன்றைக்கு உங்கள் சரீரத்திலுள்ள நரம்பு மண்டலம் பாதிக்கப்பட்டிருக்கிறதா? ஜெபிக்கும்போது, ஆவியானவருடைய வல்லமை உங்கள் நரம்பு மண்டலத்திற்குள் இறங்கி, அதை உயிர்ப்பிப்பார்! உங்கள் சரீரத்திலுள்ள எலும்புகளில் பிரச்சனையா? அந்த எலும்புகளில் கர்த்தருடைய வல்லமை இறங்கி, அவைகளை உயிர்ப்பிப்பார்!

எனக்கு அன்பான சகோதரியே, இன்றைக்கு உங்கள் கர்ப்பப் பையில் பிரச்சனையா? உங்கள் கர்ப்பப் பையை ஆவியானவர் தொட்டு, அதை உயிர்ப்பிப்பார்!

உங்கள் சரீரத்தில் உள்ள எந்த உறுப்பு பாதிக்கப் பட்டிருந்தாலும், ஆவியானவரின் வல்லமை உங்களுக்குள்ளே இறங்கும்போது, அந்த உறுப்பு உயிர்ப்பிக்கப்படுகிறது! உங்கள் சரீரத்திலே ஒரு விடுதலை உண்டாகிறது! அது ஆவியானவர் கொடுக்கிற விடுதலை!

அனேக வருடங்களுக்கு முன்பு, கர்நாடகா மாநிலத்தில் உள்ள, 'கார்வார்' என்கிற ஒரு இடத்திற்கு ஊழியத்தை நிறைவேற்றுவதற்காகப் போயிருந்தோம். அங்கே ஊழியத்தை ஒழுங்கு செய்திருந்த சில மிஷனெரிகள் எங்களை ஒரு வீட்டிற்குக் கூட்டிக் கொண்டு போனார்கள்.

அந்தக் குடும்பத்தினர், பிராமண சமூகத்திலிருந்து இயேசுவை ஏற்றுக் கொண்டு இரட்சிக்கப்பட்டவர்கள். நாங்கள் அவர்களுடைய வீட்டிற்குச் சென்றிருந்தபோது, 85 வயது மதிக்கத் தக்க, மிகவும் சுறுசுறுப்பான, வயதான ஒரு தகப்பனார் அங்கே இருந்தார். நாங்கள் அவரிடம் பேசிக் கொண்டிருந்தபோது, தனக்கு நேர்ந்த ஒரு அனுபவத்தை இப்படியாக எங்களிடத்தில் சொன்னார்:

அந்தத் தகப்பனார், சில வருடங்களுக்கு முன்பு வேலை செய்து கொண்டிருந்தபோது, திடீரென்று அவருடைய கை-கால்களிலுள்ள எலும்புகள், நரம்புகள் எல்லாம் பாதிக்கப்பட்டு, செயலற்றுப் போயிற்று.

படுத்த படுக்கையாகி விட்டார்! அவருக்கு 'எல்லாமே' படுக்கையில்தான்! அதை நினைத்து நினைத்து, அவருக்கு மிகுந்த வருத்தமாக இருந்தது.

இப்படியாக தன் சரீரம் மிகவும் பாதிக்கப்பட்டு விட்டபடியினால், தன் குடும்பத்தினருக்கு, தான் ஒரு பெரிய பாரமாகி விட்டதாக எண்ணி, மிகவும் வேதனைப்பட்டார். அவரால் முன்பு போல வேலை செய்து சம்பாதிக்க முடியவில்லை. "இப்படியாகி விட்டேனே!" என்று எண்ணி, மிகவும் துக்கப்பட்டார்.

அந்தப் பகுதிக்கு எந்த ஊழியக்காரர் வந்தாலும், அங்குள்ள மிஷனெரிகள் அந்தத் தகப்பனாருக்காக ஜெபிக்கும்படியாக, அந்த ஊழியக்காரரை அவருடைய வீட்டிற்கு அழைத்துக் கொண்டு போவார்கள்.

அவர்கள் அவருக்காக ஜெபிக்கும்போது, அவர் தன் படுக்கையில் இருந்து கொண்டே அந்த ஜெபத்தில் பங்கு பெறுவார்.

ஒருநாள், ஒரு ஊழியக்காரரை அவருக்காக ஜெபிக்கும்படியாகக் கூட்டிக் கொண்டு போனார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த ஊழியக்காரர் அந்தத் தகப்பனாரைப் பார்த்து, "ஐயா, உங்களுக்கு என்ன காரியத்திற்காக நான் ஜெபிக்க வேண்டும்?" என்று கேட்டபோது, "ஐயா, நான் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட வேண்டும்.

அந்த அபிஷேகத்திற்காக நான் அதிக வாஞ்சையோடு காத்துக் கொண்டிருக்கிறேன். பரிசுத்த ஆவியின் அபிஷேகம் எனக்கு வேண்டும். இன்னும் எனக்கு அந்த அபிஷேகம் கிடைக்கவில்லை. அதற்காக ஜெபம் செய்யுங்கள்." என்று சொன்னார்.

பாருங்கள், தான் இருக்கிற நிலைமையில், தான் சுகம் பெற வேண்டுமென்று அவர் நினைக்கவில்லை. அந்த நிலைமையிலும், "நான் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற வேண்டும். ஆவியானவர் எனக்குள்ளே வர வேண்டும். அதுதான் என் விருப்பம்." என்று சொன்னார். அந்த வார்த்தையைக் கேட்ட அந்த ஊழியக்காரருக்கு மிகுந்த ஆச்சரியம்!

"என்ன? இவர் நடக்க முடியாமல், படுத்த படுக்கையாக இருக்கிறார்! 'எனக்கு சுகம் வேண்டும்.' என்று ஜெபிக்கக் கேட்டுக் கொள்ளாமல், 'எனக்கு அபிஷேகம் வேண்டும். பரிசுத்த ஆவியானவரால் நான் நிரப்பப்பட வேண்டும்." என்று கேட்கிறாரே!" என்று அவருக்கு மிகவும் சந்தோஷம்.

"சரி, நான் உங்களுக்காக ஜெபிக்கிறேன். நீங்களும் என்னோடு சேர்ந்து ஜெபியுங்கள்." என்று சொல்லி விட்டு, எல்லோரும் அவருடைய படுக்கையைச் சுற்றிலும் நின்று கொண்டு, ஸ்தோத்திரம் பண்ணி ஜெபித்தார்கள்.

அந்த ஊழியக்காரர் ஆவியில் நிரம்பி, அந்நிய பாஷையில் அவருக்காக ஜெபித்தார்.

அந்த மகிமையான ஜெப வேளையில், பரிசுத்த ஆவியானவரின் வல்லமை அந்தத் தகப்பனார் மீது இறங்க ஆரம்பித்தது.

எல்லோரும் ஆவியில் நிரம்பி, அந்நிய பாஷையில் ஜெபித்துக் கொண்டிருந்தார்கள். ஜெபத்தை முடித்து, கண்களைத் திறந்து பார்த்தால், படுக்கையிலிருந்த அந்தத் தகப்பனாரைக் காணவில்லை!

அவர் அந்தப் படுக்கையிலிருந்து எழுந்து, துள்ளிக் குதித்து, மிகுந்த சந்தோஷத்தோடு நடனம் ஆடியபடியே, சற்று தூரத்தில் அந்நிய பாஷையில் பேசிக் கொண்டிருந்தார்.

பாருங்கள், தன் கை-கால்களைப் பயன்படுத்த முடியாமல், படுத்த படுக்கையாக இருந்தவர் மீது பரிசுத்த ஆவியானவர் இறங்கி, செயலற்றுப் போயிருந்த அவருடைய கை-கால்களிலுள்ள நரம்புகளையும், எலும்புகளையும் உயிர்ப்பித்து விட்டார்!

அவருடைய சரீரத்திலே, அற்புதமான ஒரு விடுதலை உண்டாயிற்று! அவருடைய அந்த வியாதியின் கட்டு அறுக்கப்பட்டு விட்டது! அவருடைய சரீரம் உயிர்ப்பிக்கப்பட்டு விட்டது!

அவர் என்னிடத்தில் பேசிக் கொண்டிருந்தபோது, "தம்பி, இன்றைக்கு என்னைப் பாருங்கள்; கர்த்தர் என்னை எப்படி சுகமாய் வைத்திருக்கிறார் என்று!

இந்த 85 வயதிலும், நான் சுறுசுறுப்பாக வேலை செய்து சம்பாதிக்கிறேன். இப்பொழுது நான் என் பிள்ளைகளுக்குப் பாரமாக இல்லை. இயேசு எனக்கு சுகம் கொடுத்தார்!" என்று மிகுந்த மகிழ்ச்சியோடு சொன்னார்.

எனக்கு அன்பானவர்களே, அந்தத் தகப்பனாருக்கு எப்படி அந்த சுகம் வந்தது? பரிசுத்த ஆவியானவர் மிகுந்த வல்லமையாக அவருக்குள் இறங்கியபோது, அவருடைய செயலற்றுப் போயிருந்த உறுப்புகள் எல்லாம் உயிரடைந்து, புது பெலன் உண்டாகி, அற்புதமான சுகத்தை அவருக்குக் கொடுத்தது.

அதே ஆவியானவர்தான், இன்றைக்கு உங்கள் மீது இறங்கப் போகிறார்! அதே ஆவியானவர்தான், பெலவீனப்பட்டிருக்கிற உங்களுடைய சரீரத்தை உயிர்ப்பிக்கப் போகிறார்! அதே ஆவியானவர்தான், பாதிக்கப்பட்டிருக்கிற உங்களுடைய எலும்புகளை உயிர்ப்பிக்கப் போகிறார்! அதே ஆவியானவர்தான், பாதிக்கப்பட்டிருக்கிற உங்கள் சரீரத்திலுள்ள எல்லா நரம்புகளையும் உயிர்ப்பிக்கப் போகிறார்!

ஆவியானவரின் வல்லமை வந்து விட்டால், சப்பாணிகள் கூட எழும்பி நடக்க ஆரம்பித்து விடுவார்கள்!

கட்டுகள் அறுக்கப்பட்டு விடும்! சரீரத்தில் இருக்கிற புற்று நோய் எல்லாம் மறைந்து போய் விடும்! கர்த்தருடைய அந்த அபிஷேகத்தின் வல்லமை உங்களுக்குள் இறங்கும்போது, வியாதியைக் கொண்டு வருகிற விஷக் கிருமிகள் முற்றிலுமாக அழிந்து விடும்.

ஆவியானவரின் வல்லமை இறங்கும்போது, சரீரத்தின் கட்டுகள் அறுக்கப்பட்டு, ஒரு பூரண விடுதலை உண்டாகி விடும்!

நோய்கள் எல்லாம் மாறி, பாதிக்கப்பட்ட சரீர உறுப்புகள் எதுவாக இருந்தாலும், புதிதாக மாறி விடும்! இதுதான், ஆவியானவர் கொடுக்கிற விடுதலை! ஆவியானவர் நம்முடைய சரீரத்தை உயிர்ப்பிக்கிறார்.

**"...இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய (பிதா) ஆவி உங்களில் வாசமாயிருந்தால், ...உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்." ரோமர் 8:11.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவியில் விடுதலை தருகிறார்!

"நம்முடைய ஆவிதான், உள்ளான மனுஷன்!" என்று பார்த்தோம். "இந்த ஆவியில் என்ன பிரச்சனை?" என்றால், சிலருக்குள்ளே பயத்தின் ஆவி இருக்கும். எதற்கெடுத்தாலும் பயப்படுவார்கள். இரவு வேளைகளில், அவர்களால் நிம்மதியாகத் தூங்க முடியாது.

சிலர், "இரவு நேரம் வந்தாலே எனக்குப் பயமாக இருக்கிறது!" என்பார்கள். அது ஒரு பயத்தின் ஆவி. அந்த பயத்தினால் அவர்களுடைய ஆவியில் ஒரு கலக்கம்! சிலருக்குள்ளே எப்பொழுதும் கவலை!

சிலர், மணிக்கணக்காக தேவ சமூகத்தில் அமர்ந்து ஜெபித்து முடித்த பிறகும்கூட, "என்ன வாழ்க்கை இது? கர்த்தர் என்னதான் செய்கிறார்? ஜெபித்து ஜெபித்து என்னத்தைக் கண்டேன்? எனக்காக ஜெபியுங்கள் ஐயா..." என்று சொல்லி, ஊழியக்காரர்களிடத்திலே போய் புலம்பிக் கொண்டிருப்பார்கள்.



அந்தக் கவலை, அவர்களை விட்டுப் போகாது. அது ஒரு ஆவி! அந்த ஆவி, ஒரு ஆவிக்குரிய மனிதனைக் கூட தாக்கி விடுகிறது! 'கவலை' என்பது, பிசாசு கொண்டு வருகிற ஒரு ஆயுதம் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

அதிலும் சிலர், "நமக்காகப் பரிதாபப்பட்டு ஜெபம் செய்வார்கள்." என்று சொல்லி, கவலைப்படுவதை ஒரு பெருமையாகவே நினைத்துக் கொண்டிருப்பார்கள். அப்படிப்பட்டவர்களைப் பார்த்து நான் சொல்கிற காரியம்: "அழாதீர்கள். அழுதால் அற்புதம் நடக்காது. **விசுவாசித்தால்தான் அற்புதம் நடக்கும்.**"

"கர்த்தரை அறியாதவர்கள்." என்றால் பரவாயில்லை. "ஐயோ, அழுகிறார்களே! கண்ணீர் வடித்துக் கலங்குகிறார்களே!" என்று, கர்த்தர் அவர்களுடைய கண்ணீரைப் பார்த்து, ஒருவேளை அவர்களுக்கு இரங்குவார்.

அதே சமயத்தில், இரட்சிக்கப்பட்டவர்கள் அழுது கொண்டிருந்தால், அற்புதம் நடக்காது. **விசுவாசித்தால்தான் அற்புதம் நடக்கும்!**

ஆக, 'கவலை' என்பது, பிசாசு கொண்டு வருகிற ஒரு காரியம். நம்முடைய ஆவியில் அவன் கவலையை வைத்து விடுவான். சிலர், காலையில் எழுந்ததில் இருந்து, இரவு படுக்கைக்குப் போகும் வரைக்கும் கவலைப்பட்டுக் கொண்டே இருப்பார்கள்.

சில தாய்மார்கள், எப்பொழுதும் அன்னாளைப் போல அழுது கொண்டே இருப்பார்கள். ஆரம்பத்தில், **அன்னாள்** எப்பொழுதும் அழுது கொண்டேதான் இருந்தாள். "எல்லோரும் என்னைப் பற்றி கேவலமாகப் பேசுகிறார்கள். யாரும் என்னைப் புரிந்து கொள்ளவில்லை. என்னை மட்டும் கர்த்தர் இப்படி வைத்து விட்டாரே!" என்று சொல்லி, அழுது கொண்டுதான் இருந்தாள்.

அவளுடைய கணவனாகிய, **'எல்க்கானா'** என்பவன், அவளிடத்தில் மிகுந்த அன்போடு, "நீ ஏன் அழுகிறாய்? நான் உனக்குப் போதும். பத்துக் குமாரர்களைப் பார்க்கிலும் நான் உனக்குப் பெரிதுதானே! நான் உன்னை நேசிக்கிறேன்." **(1 சாமுவேல் 1:8)** என்று ஆறுதல் சொன்ன போதும் கூட, தன் கணவன் தன் மீது வைத்திருக்கிற அன்பைக் கூட அவளால் புரிந்து கொள்ள முடியாமல், எப்பொழுதும் அழுது கொண்டேதான் இருந்தாள்.

அது ஒரு ஆவி! ஆவியில் ஒரு கலக்கம்! சிலருக்குக் கவலை! சிலருக்குப் பயம்! சிலருக்கு மன அழுத்தம்! நீங்கள் கவலைக்கு இடம் கொடுப்பீர்கள் என்றால், பிசாசானவன் உங்களுக்குள்ளே நுழைந்து, அதைப் பெரிதாக்கி, கடைசியில் உங்களை பயங்கரமான மன அழுத்தத்திற்குள்ளே கொண்டு போய் விடுவான். ஆகவே, **எக்காரணத்தைக் கொண்டும், கவலைக்கு இடமே கொடுக்காதீர்கள்.**

நீங்கள் கவலைப்படும்போது, உங்கள் மனதுக்குள்ளே சாத்தானுக்குக் கதவை திறந்து விடுகிறீர்கள் என்று அர்த்தம். நீங்கள் கவலைக்கு இடம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்து விட்டீர்கள் என்றால், உங்கள் வாழ்க்கைக்குள்ளே சாத்தானுக்கு நீங்கள் வழி திறக்கிறீர்கள் என்று அர்த்தம். ஆகவே, மிகவும் ஜாக்கிரதையாக இருங்கள்.

ஆகவேதான் கர்த்தர், **"பயப்படாதே...கவலைப்படாதே..."** என்று பரிசுத்த வேதாகமத்தில் அனேக இடங்களில் சொல்லி வைத்திருக்கிறார்.

பயத்தை நாம் மேற்கொள்ள வேண்டும்! கவலையை நாம் மேற்கொள்ள வேண்டும்! இல்லாத பட்சத்தில், உங்கள் சிந்தனை வழியாக சாத்தான் உங்களுக்குள்ளே நுழைந்து, உங்களை மன அழுத்தத்திற்குள்ளாக்கி, கடைசியில், உங்களை தற்கொலைக்கு நேராகக் கொண்டு போய் விட்டு விடுவான். இது, பிசாசின் பயங்கரமான ஒரு தந்திரம்.

இன்றைக்கு, உங்களுடைய ஆவியிலே கர்த்தர் ஒரு விடுதலையை தரப் போகிறார்! ஆவியானவரின் வல்லமை இறங்கும்போதுதான், உங்களுக்குள் இருக்கிற மன அழுத்தம் உங்களை விட்டு விலகும்! உங்களுக்குள் இருக்கிற கவலை உங்களை விட்டு விலகும்! உங்களுக்குள் இருக்கிற பயம் உங்களை விட்டு விலகும்! உங்களுடைய ஆவியில் ஒரு விடுதலை உண்டாகும்!

இப்படியாக, உங்களுடைய 'ஆவி!', 'ஆத்துமா!', 'சரீரம்!' ஆகிய மூன்று பகுதிகளிலும் நீங்கள் விடுதலை பெற்று விட்டீர்கள் என்றால், நீங்கள் எப்பொழுதும் சந்தோஷமாகவே இருப்பீர்கள்! உங்களைச் சுற்றிலும் என்ன நடந்தாலும், அதைப் பற்றிக் கவலைப்படாமல், எப்பொழுதும் நீங்கள் மகிழ்ச்சியாகவே இருப்பீர்கள்! என்ன நடந்தாலும் நீங்கள் அதைக் குறித்துக் கலங்காமல், சந்தோஷமாக கர்த்தரைத் துதித்துக் கொண்டே இருப்பீர்கள்.

அப்பொழுதுதான், யாராலும் விளங்கிக் கொள்ள முடியாத ஒரு பூரண சமாதானம் உங்கள் வாழ்க்கையில் இருக்கும். மாறாக, உங்களுடைய ஆத்துமாவில் ஒரு பாதிப்பு வந்தாலோ, அல்லது உங்கள் சரீரத்தில் ஒரு பாதிப்பு வந்தாலோ, அல்லது உங்களுடைய ஆவியில் ஒரு பாதிப்பு வந்தாலோ, உங்களுடைய முழுமையான சமாதானம் பாதிக்கப்படும்.

ஆனால், ஆவியானவர் கொடுக்கிற அந்த விடுதலை வந்து விட்டால், உங்களுக்கு முழுமையான விடுதலை. அதற்காகத்தான் கர்த்தர், தம்முடைய பரிசுத்த ஆவியை பூமிக்கு அனுப்பி இருக்கிறார்.

**ஆவியானவர் எங்கேயோ, அங்கே விடுதலை உண்டு!**

இன்றைக்கு அந்த ஆவியானவர், உங்கள் மீது இறங்கி வரப் போகிறார்! உங்களுடைய சரீரத்திற்குள்ளே ஆவியானவர் கடந்து வரப் போகிறார்! அந்த ஆவியானவர், இன்றைக்கு உங்களை நிரப்பப் போகிறார்!

அவர் உங்களுக்குள் வந்து விட்டாலே, உங்களுக்கு ஒரு விடுதலை உண்டாகி விடும்! ஒருவேளை நீங்கள் இரட்சிக்கப்பட்டு இருப்பீர்களானால், உங்கள் ஆத்துமாவை பிசாசினால் தொட முடியாது. அதே சமயத்தில், நீங்கள் ஏதாவதொரு பயத்திற்கு இடம் கொடுத்து விட்டால், பிசாசு உங்கள் ஆவியில் நுழைந்து, உங்களுக்குள்ளே கிரியை செய்ய ஆரம்பித்து விடுவான்.

உங்களுடைய சரீரத்திலே நீங்கள் பிசாசுக்கு இடம் கொடுத்து விட்டீர்களென்றால், உங்கள் சரீரத்திற்குள்ளே அவன் நுழைந்து விடுவான். உங்களுடைய ஆத்துமாவில் இரட்சிப்பின் சந்தோஷம் இருக்கும். ஆனால், உங்கள் சரீரம் பாதிக்கப்பட்டதாக இருக்கும்.

"நான்தான் இரட்சிக்கப்பட்டிருக்கிறேனே! என் பாவம் மன்னிக்கப்பட்டு விட்டதே! பிறகு ஏன் எனக்கு இப்படியெல்லாம் நடக்கிறது?" என்று சொல்லி வேதனைப்பட்டுக் கொண்டே இருப்பீர்கள். அதாவது, உங்கள் ஆத்துமா இரட்சிக்கப்பட்டிருந்தாலும், உங்களுடைய ஆவியில் ஒரு விடுதலை இருக்காது.

நீங்கள்தான் அதை மேற்கொள்ள வேண்டும். அதற்கு, ஆவியானவர் உங்களுக்கு உதவி செய்ய வல்லமை உள்ளவராக இருக்கிறார். ஆவியானவர் உங்களுக்குள் வரும்போது, ஒரு முழுமையான விடுதலை உங்களுக்கு உண்டாகும்!

பரிசுத்த ஆவியானவர் கொடுக்கும் இந்த விடுதலையைப் பெற்றுக் கொள்ள, நீங்கள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட வேண்டும். இரட்சிக்கப்பட்ட தேவப் பிள்ளைகள் தாகத்தோடு கேட்கும்போது, தேவன் பரிசுத்த ஆவியினால் நிரப்புவார். நீங்களும் **தாகத்தோடு கேளுங்கள், பெற்றுக் கொள்வீர்கள். (யோவான் 7:37-39).**

ஆண்டவரே, உமக்கு ஸ்தோத்திரம்!

ஆவியானவர் அருளும் விடுதலையை அறிந்து கொள்ளச் செய்ததற்காக, உமக்கு ஸ்தோத்திரம்!



"எனக்கும் ஒரு விடுதலை தேவை!" என்பதை நான் உணர்கிறேன்!

ஆவியானவர் கொடுக்கும் அந்த விடுதலைக்காக நான் வேண்டுகிறேன்!

என்னையும் பரிசுத்த ஆவியினால் நிரப்பியருளும்!

ஆவியானவரின் வல்லமை, என் ஆவி, ஆத்துமா, சரீரத்தில் இறங்குவதாக! இப்பொழுதே அக்கினியாக ஆவியானவர் என்னை நிரப்புவீராக!

என் உச்சந்தலை முதல், உள்ளங்கால்வரை, உமது அபிஷேகத்தின் வல்லமை இறங்குவதாக!

"தாகமுள்ளவர்கள் பெற்றுக் கொள்வார்கள்!" என்ற உம்முடைய வார்த்தையின்படியே, தாகத்தோடு கேட்கிற என்னை நீர் நிரப்புகிறதற்காக, உமக்கு ஸ்தோத்திரம்! ஸ்தோத்திரம்!

இயேசுவின் நாமத்தில்... ஆமென்! ஆமென்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கெத்செமனே
ஜெப மையம்
**GETHSEMANE**
PRAYER CENTRE

முகவரி: இல. 31, உதயநகர் கிழக்கு,
நாகதம்பிரான் கோவில் வீதி,
கிளிநொச்சி.
Ph: 021 - 2285 284.

**அலுவலக நேரம் தினமும் காலை 9:00 - மாலை 7:00 மணிவரை.**

### இங்கு நடைபெறும் ஊழியங்கள்!

**பெண்கள் ஜெபம்!**
(புதன்கிழமைதோறும்)
12:00 P.M. - 3:00 P.M.

**உபவாச ஜெபம்!**
(சனிக்கிழமைதோறும்)
9:00 A.M. - 12:00 Noon

**சினெர்ஜியா வாலிபர் கூட்டம்!**
(ஞாயிற்றுக்கிழமைதோறும்)
3:00 P.M. - 4:00 P.M.

**அற்புத விடுதலை பிரார்த்தனை!**
(ஒவ்வொரு மாதமும் 2வது சனிக்கிழமை)
5:00 P.M. - 7:00 P.M.

**முழு இரவு ஜெபம்**
(போயா நாளின் முந்தைய தினம்)
இரவு 10:00 P.M. - காலை 5:00 A.M.

## இலங்கை தேசத்தின் ஆசீர்வாதத்திற்காக ஜெபிக்க வாருங்கள்!

## காணிக்கை அனுப்புவோர்
### கவனத்திற்கு...



'இயேசு விடுவிக்கிறார்' ஊழியத்திற்காக, பத்திரிக்கை மற்றும் தொலைக்காட்சி ஊழியத்திற்காகக் கொடுத்து தாங்க விரும்புகிறவர்கள், கீழ்கண்ட வங்கிக் கணக்கில் உங்கள் காணிக்கைகளைச் செலுத்தி, தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

**முக்கிய குறிப்பு!**

நீங்கள் காணிக்கை அனுப்பிய பின்னர் நீங்கள் செலுத்தியதற்கான வங்கி சீட்டினையும், எந்த ஊழியத்திற்காக அனுப்பினீர்கள் என்ற விபரத்தையும், உங்களது முழு முகவரியுடன் எங்களுக்கு அனுப்பி வையுங்கள். அல்லது தொலைபேசியின் மூலமாக தெரியப்படுத்தலாம். உங்களுக்காக ஜெபித்து, பதில் எழுத அது ஏதுவாயிருக்கும்.

**A/C Name: Jesus Redeems Ministries - Sri Lanka, A/C No. 7010 1000 7680**
**Bank: Hatton National Bank PLC. Branch: Nawam Mawatha - Colombo -02. Swift Code : HBLILKLXXXX.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவேறிக் கொண்டிருக்கும் தேவ திட்டம்!

# தேவனுடைய கூடாரம்!

தேவனுடைய கூடாரக் கட்டுமான பணிகள், இறுதிக் கட்டத்தை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. கர்த்தருடைய பெரிதான கிருபையினால், தற்போது **தரை போடுகிற பணிகள்** நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அதைத் தொடர்ந்து, **முன் பகுதியில் செய்யப்பட இருக்கிற** மற்றும் **ஜெப கோபுரம் அமைக்கப்பட இருக்கிற பணிகள்** சீக்கிரமாக செய்து முடிக்கப்பட வேண்டும். இதற்காக அதிகமாக **ஜெபியுங்கள்.**

இந்தக் கட்டுமானப் பணிக்காகக் கொடுத்து தாங்குகிற தேவ பிள்ளைகளை, கர்த்தர் ஆசீர்வதித்து வருகிறார்.




**இந்த தேவனுடைய கூடாரக் கட்டுமானப் பணிக்காகக் காணிக்கை அனுப்ப நீங்கள் கர்த்தரால் ஏவப்பட்டால், இங்கே கொடுக்கப்பட்டுள்ள வங்கிக் கணக்கில் உங்கள் காணிக்கைகளைச் செலுத்தி, தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.**

- உங்கள் சகோதரன்.

## காணிக்கை அனுப்ப...

| | |
|---|---|
| A/c Name: | Jesus Redeems Ministries - Sri Lanka, |
| A/c No: | 7010 1000 7680 |
| Bank Name: | Hatton National Bank PLC. |
| Branch: | Nawam Mawatha - Colombo -02. |
| Swift Code: | HBLILKLXXXX. |

**Contact: 57/36A, Thimbirigasyaya Road, Hendala, P.O. 108, Wattala, SRILANKA.**
*(Ph: 011 293 0152, 071 437 1111)*

# வெளி வந்து விட்டது!




உங்கள் விசுவாசம் தூண்டப்பட... அற்புதங்களை பெற்றுக் கொள்ள...

## வாங்கிப் பயனடையுங்கள்!

நமது சகோதரர் **மோகன் சி. லாசரஸ்** அவர்கள் எழுதிய, ஓர் உன்னத புத்தகம்!

# விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும்!

நேரில் பெற **100/- ரூபா** தபாலில் பெற **150/- ரூபா**

Online Purchase: www.jesusredeemsonline.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Before the End...

# முடிவுக்கு முன்...



சிறப்புச் செய்தி:
சகோ. வின்சென்ட் செல்வக்குமார்,
(இயேசுவின் தொனி ஊழியங்கள், இராமநாதபுரம்)

கடந்த (2016) செப்டம்பர் மாத இதழில் தொடர்ந்து வாசிக்கும்போது, "அப்படிப்பட்டவர்கள் மாத்திரமே பரலோகத்தில் உயரிய ஸ்தானத்தில் வைக்கப்படுகிறார்கள். அவர்கள்தான் தேவனுடைய சிங்காசனத்தின் முன்பாக நிறுத்தப்பட்டு, இரவும், பகலுமாக அவருக்கு பணிவிடை செய்கிறார்கள்.
"அது எத்தனை பெரிய பாக்கியம்!" என்று பாருங்கள்.
**"தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான், என்னிமித்தமாகவும் சுவிசேஷத்தினிமித்தமாகவும் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதை இரட்சித்துக்கொள்ளுவான்." மாற்கு 8:35."**
என்கிற வேத வசனத்தோடு வாசித்து முடித்தோம்.

அதன் **தொடர்ச்சியை** வாசியுங்கள்.

## முடிவு...!

யோசித்துப் பார்த்தால், 'முடிவு!' என்கிற வார்த்தையே, அபத்தம் போலத் தோன்றுகிறது.

காரணம், ஒன்றின் 'முடிவு' என்பது, மற்றொன்றின் ஆரம்பமாக இருக்கிறது.

எதுவொன்றும் முற்றிலுமாக முடிந்து போய் விடுவதில்லை. அது, வேறொன்றாக ஆரம்பித்து விடுகிறது. மரத்தின் துளிர் இலையாகும்போது, அங்கே ஒரு துளிர் முடிந்து போகிறது. ஒரு இலை ஆரம்பமாகிறது. அந்த இலை உதிர்ந்து போகும்போது, அங்கே ஒரு இலை முடிந்து போகிறது. ஆனால், ஒரு சருகு ஆரம்பமாகி விடுகிறது.

அதேபோல ஒரு விதை மண்ணில் விழும்போது, விதை முடிந்து போகிறது. அங்கே அது செடியாக ஆரம்பமாகிறது. அந்தச் செடி மரமாகும் போது...

"போதும் சார்... ஒரே தத்துவமாய் போகிறதே! என்னதான் சொல்ல வருகிறீர்கள்?" என்று கேட்கிறீர்களா?

இல்லை! நாம் உலகத்தின் முடிவைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறோம். "முடிவு' என்று நாம் எதைச் சொல்கிறோம்?" என்று யோசித்துப் பார்த்தேன்.

இரண்டாம் வருகையையா?

சாத்தானும், அவனைச் சேர்ந்தவர்களும் பாதாளத்தில் சிறை வைக்கப்படுவதையா?

'அர்மகெதோன்' யுத்தத்தையா?

சாத்தானும், அவனைச் சேர்ந்தவர்களும் பிடிபட்டு, அக்கினிக் கடலில் தள்ளப்படுவதையா?

கர்த்தருடைய பிள்ளைகள் எல்லோரும் பூமியை விட்டு விலகி, கர்த்தர் தங்களுக்கு ஆயத்தப்படுத்தி வைத்திருக்கிற வாசஸ்தலத்தை சுதந்தரித்துக் கொள்வதையா?

இதில், எது முடிவு?

இதில், ஒவ்வொன்றிற்கு அப்புறமும் நிகழ்வுகள் தொடர்வதைக் கவனியுங்கள்.

இரண்டாம் வருகைக்குப் பிறகு, ஆயிரம் வருட அரசாட்சி!

ஆயிரம் வருட அரசாட்சிக்குப் பிறகு, அர்மகெதோன் யுத்தம்!



அர்மகெதோன் யுத்தத்தின் முடிவில், சாத்தானும், அவனுடைய சேனையும் நிரந்தரமாக அக்கினிக் கடலில் தள்ளப்படுவது!

தள்ளப்பட்டதோடு முடிகிறதா? இல்லை! காலம் காலமான தண்டனை அங்கே தொடர்கிறது சாத்தானுக்கு! அப்படியானால், கர்த்தரைப் பின்பற்றியவர்களின் நிலையைக் கவனியுங்கள். அவர்கள், கர்த்தர் தங்களுக்கு உண்டு பண்ணி வைத்திருக்கிற வாசஸ்தலத்தில், தங்கள் வாழ்க்கையைத் தொடர்கிறார்கள். காலம் காலமாக தொடர்ந்து வாழப் போகிறார்கள்!

இதில், எதுவொன்றும் முடிந்து போனதாகத் தெரியவில்லையே! சாத்தானுக்கு பாதாளத்தில் தண்டனை வாழ்க்கையும், கர்த்தருடைய பிள்ளைகளுக்கு பரலோகத்தில் மகிழ்ச்சியான வாழ்க்கையும் ஆரம்பமாகிறது.

"முடிவு!' என்றால், எதுவொன்றும் மிச்சம் இருக்காமல், முற்றிலுமாக அழிக்கப்பட்டல்லவா போயிருக்க வேண்டும்? இங்கே, எதுவொன்றும் முற்றிலுமான முடிவை அடையவில்லையே!" என்று யோசித்த போதுதான், 'மரம்', 'இலை', 'துளிர்' என்றெல்லாம் தத்துவங்கள் வர ஆரம்பித்து விட்டன. நீங்கள் அணை போடா விட்டால், முடிவே இல்லாமல் பேசிக் கொண்டே இருந்திருப்பேன். நல்ல வேளை, தப்பித்தீர்கள்.

சாத்தானையும், மனிதர்களையும் மாத்திரமல்ல, தேவன் படைத்த எதுவொன்றையும் யாராலும் முற்றிலுமாக அழித்து விட முடியாது. காரணம், தேவன் நித்தியர்! அவர் படைத்த எல்லாமே நித்தியமானதாகவே இருக்கிறது. என்ன?! அதன் நிலைகளை வேண்டுமானால், மாற்றலாமே ஒழிய, எதுவொன்றையும் முற்றிலுமாக அழித்து விட முடியாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு காகிதத்தை எரித்தால், அது அழிந்து விடாது, சாம்பலாகி விடும். அந்தச் சாம்பலையும் தட்டி விட்டால், அது காற்றில் கரைந்து, பூமியின் எங்கோ ஒரு இடத்தில்தான் படிமானமாகப் படிந்திருக்கும். முற்றிலும் அழிந்து விடாது.

ஒரு புரிந்து கொள்ளுதலுக்காகத்தான், 'கடைசிக் காலம்!', 'முடிவு நாட்கள்!' என்றெல்லாம் நாம் சொல்கிறோமே ஒழிய, உண்மையில் எதுவொன்றும் முடிந்து விடுவதில்லை. வேறொரு நிலையில், வேறொரு பரிமாணத்தில் அது தொடரத்தான் செய்கிறது.

மனிதர்களின் வாழ்க்கையும் அப்படித்தான். 'முடிவுக் காலம்!' என்று சொல்லும் இந்த காலக் கட்டத்திற்குப் பிறகு, ஒவ்வொருவரின் வாழ்க்கையும் அதினதின் நிலைகளுக்கேற்ப வெவ்வேறு திசைகளில் பயணப்பட ஆரம்பித்து விடுமே ஒழிய, யார் ஒருவருடைய வாழ்க்கையும் முற்றிலுமாக மறைந்து விடாது.

அதாவது, நல்லவர்களின் வாழ்க்கை பரலோகத்திலும், பொல்லாதவர்களின் வாழ்க்கை பாதாளத்திலும் தொடர்கிறது. முடிந்து விடுவதில்லை!

அதனால்தான் இவ்வளவாய் கவலைப்படுகிறோம். "முற்றிலுமாக முடிந்து விடும்!" என்றால், பாவமோ? புண்ணியமோ? எதைப் பற்றியும் கவலையே படாமல், மனம் போனபடியெல்லாம் வாழ்ந்து விடலாம். ஆனால் அப்படி இல்லாமல், **நாம் செய்கிற கிரியைகளுக்கு ஏற்ப நம்முடைய வாழ்க்கை இன்னொரு நிலையில் தொடரப் போவதுதான் நம்மை சிந்திக்க வைக்கிறது.**

உலகத்தின் முடிவுக்கு முன்னால் நடைபெறப் போகிற சம்பவங்களைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தேன். முடிவுக்கு முன்னால் நடைபெறப் போகிற சம்பவங்களில், ஒரு சிறு துளியளவுதான் பார்த்திருக்கிறோம்!

**இயேசு** கிறிஸ்துவிடம் கேட்டபோது, உலகத்தின் முடிவுக்கு முன்பாக நடைபெறப் போகிற காரியங்களைப் பற்றி அனேக தகவல்களைச் சொன்னார்.

**'யுத்தங்கள்!'**, **'கலவரங்கள்!'**, **'படுகொலைகள்!'**, **'கொள்ளைகள்!'**, **'பஞ்சங்கள்!'**, **'கொள்ளை நோய்கள்!'**, **'பூமியதிர்ச்சிகள்!'**, **'கடல் சீற்றங்கள்!'**, **'வஞ்சகங்கள்!'**, **'காட்டிக் கொடுத்தல்!'**, **'பகைக்கப் படுதல்!'**, **'அன்புத் தாழ்ச்சி!'**, **'மனிதர்களின் மன நிலை மாற்றம்!'**, **'பாவங்களின் பெருக்கம்!'**...என்று, முடிவுக்கு முன்னால் நடைபெறப் போகிற சம்பவங்களின் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது.

முடிவுக் காலத்தைப் பொறுத்த வரையில், அதை **3 நிலைகளாகப்** பகுத்துக் கொள்ளலாம்.

**முதலாவது**, முடிவுக்கு முன்பாக நடைபெறப் போகும் சம்பவங்கள்.

**2வது**, முடிவு நாளில் நடைபெறப் போகும் சம்பவங்கள்.

**3வது**, முடிவுக்குப் பின்னாக நடைபெறப் போகும் சம்பவங்கள்.

ஆனால் இதில், எதை 'முடிவு!' என்று சொல்வதானால், அதற்குப் பின்பாக ஆயிரம் வருட அரசாட்சியும், அதன் முடிவில் சாத்தானுக்குக் கொடுக்கப்படும் கொஞ்சக் கால அவகாசமும், அதன் பின்பாக நடக்கப் போகிற அர்மகெதோன் யுத்தமும் நடக்க வேண்டியதாக இருக்கிறது.

சரி! 'அர்மகெதோன் யுத்தம்தான் முடிவு!' என்று வைத்துக் கொண்டால், 'நியாயத் தீர்ப்பு!', 'தண்டனைகள்!', 'புதிய வானம்!', 'புதிய பூமி தோற்றுவிக்கப்படுதல்!' போன்ற நிகழ்ச்சிகள் எல்லாம், அதைத் தொடர்ந்து நடக்க வேண்டியதாக இருக்கிறது.

'முடிவு எது?' என்பது பற்றி, இத்தனை குழப்பங்கள் இருக்க, **இயேசு** கிறிஸ்துவினுடைய சீஷர்கள், "உலகத்தின் முடிவுக்கும், உம்முடைய வருகைக்கும் அடையாளம் என்ன?" என்று அவரிடத்தில் கேட்டதிலிருந்து, **இயேசு** கிறிஸ்துவின் வருகையையே உலகத்தின் முடிவு என்பதாக வைத்துக் கொண்டு நாம் ஆராயத் துவங்கினால், முடிவுக்கு முன்பாக, மிகவும் சமீபமாக நடைபெறப் போகிற முக்கியமான ஒரு சம்பவம், "**இயேசு** கிறிஸ்துவினுடைய **இரகசிய வருகை!**" எனலாம்.

இந்த இரகசிய வருகையானது, உபத்திரவக் காலத்தின் துவக்கத்திற்கு முன்பாக நடக்கும். இந்த இரகசிய வருகையில், பரிபூரண ஆயத்த நிலையிலிருக்கும் தம்முடைய பிள்ளைகளை மாத்திரம் **கர்த்தர்** தம்மோடு அழைத்துச் செல்வார். எல்லாக் கிறிஸ்தவர்களையும் அல்ல! எல்லா அபிஷேகம் பெற்றவர்களையும் அல்ல! ஊழியம் செய்கிற எல்லோரையும் அல்ல!

ஒரு மரத்திலிருக்கிற கனிகளைப் பறிக்கும்போது, அதிலிருக்கிற காய்களை எல்லாம் பழுக்கும்படி அந்த மரத்திலேயே விட்டு விடுவதைப்போல, பரிபூரணம் அடையாத, ஆயத்த நிலையில் இல்லாத ஏனைய தம்முடைய பிள்ளைகளை, அவர்கள் பரிபூரணமடையும்படி இந்த உலகத்திலேயே விட்டு விட்டு, தம்முடைய முதிர்ந்த கனிகளை மாத்திரமே, **கர்த்தர்** தம்முடைய இரகசிய வருகையில் தம்மோடு கூட அழைத்துச் செல்வார்.

இவர்கள் உபத்திரவக் காலத்திற்குள் நுழைவதில்லை. இவர்களைத் தவிர்த்து, **கர்த்தர்** இந்த பூமியில் விட்டுச் சென்ற மற்றைய கர்த்தருடைய பிள்ளைகளை, 'கைவிடப்பட்டவர்கள்!' என்று சொல்வது, சரியான பதமாகாது.

**கர்த்தர்** அவர்களை புறம்பே தள்ளி விட்டு விடுவதில்லை. அவர்கள் தங்கள் பரிபூரண நிலையை அடைந்து, தம்முடன் வந்து சேரும்படி அவர்களை இன்னும் கொஞ்சக் காலம் விட்டுச் செல்கிறார், அவ்வளவுதான்!

இவர்கள், வரப் போகும் உபத்திரவக் காலத்தில் கர்த்தருக்காக உபத்திரவங்களைச் சகிக்க வேண்டும்! பலர், இரத்த சாட்சிகளாக மரிக்க வேண்டியது வரும்! பல்வேறு விதமான சாத்தானின் சோதனைகளை எதிர்கொள்ள வேண்டியது வரும்! அதில், இவர்கள் ஜெயம் பெற்று, தங்கள் ஆயத்த நிலையை அடைந்தால், கர்த்தர் தம்முடைய இரண்டாம் வருகையில் இவர்களை தம்முடன் அழைத்துச் செல்வார்.

வேதாகமப் பண்டிதர்களில் சிலர், 'இரகசிய வருகை!' என்கிற பதத்தை நம்புவதில்லை. காரணம் கேட்டால், "இரகசிய வருகை!' என்ற வார்த்தையே பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்படவில்லை." என்கிறார்கள்.



தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்பு - திறப்பின் வாசல் ஜெபம்

# வேண்டுதல் கேட்ட தேவன்!



தேசம் சுபிட்சமாக மாறினால்தான் தேச ஜனங்களும் சுகமாக வாழ முடியும். அதற்காகவே ஒவ்வொரு மாதமும் இலங்கை தேசத்தின் ஆசீர்வாதங்களுக்காக கொழும்பு பட்டணத்தில் வைத்து திறப்பின் வாசல் ஜெபம் நடத்தப்பட்டு வருகிறது.

செப்டம்பர் மாதம் காலிமுகவீதி கிறிஸ்து நாதர் ஆலய மண்டபத்தில் நடைபெற்ற ஜெபத்தில் தேசத்தின் பல பகுதிகளிலிருந்தும் ஏராளமான மக்கள் கூடி வந்து தேசத்தின் ஆசீர்வாதங்களுக்காக கண்ணீருடன் பிரார்த்தனைகள் ஏறெடுத்தனர். பல்வேறுபட்ட திருச்சபைகளைச் சேர்ந்த சுமார் 17 போதகர்கள் இந்த ஜெபத்தில் இணைந்து ஜெபித்தது மிகப்பெரிய ஆசீர்வாதமாக அமைந்தது. Pr. அஜித் அவர்கள் ஆராதனை வேளைகளை நடத்த தேசத்திற்கான ஜெபத்தை சகோ. ரூபன் அவர்கள் நடத்தினார்கள்.

இறுதியில் Dr. R. அன்புராஜன் ('இயேசு விடுவிக்கிறார்', இந்தியா) அவர்கள் "நாம் நினைக்கிறதற்கும் வேண்டிக் கொள்ளுகிறதற்கும் அதிகமாய் தேவன் கிரியை செய்வார்" என்ற வேத வசன அடிப்படையலான செய்தியளித்து ஜெபங்கள் ஏறெடுத்தபொழுது வந்திருந்த தேவப்பிள்ளைகள் மிகுந்த ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்டனர்.

முன்னதாக ஜெபத்தின் மூலமாக தேவனிடமிருந்து அற்புதங்களைப் பெற்றுக் கொண்ட மக்கள் சாட்சி கூறி தேவனை மகிமைப்படுத்தினர்.



Pr. அஜித்



சகோ. ரூபன்



கலந்துக் கொண்ட போதகர்கள்



Dr. R. அன்புராஜன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கர்த்தர் செய்த அற்புதங்களில் சில...

### கண்ணீரை துடைத்தார்!

எனது பேரன் வீட்டில் இருக்கும்பொழுது ஐந்து ரூபாய் நாணயத்தை விழுங்கி விட்டதால் வைத்தியரிடத்தில் கொண்டு சென்ற போது, அவர் மருந்து கொடுத்து விட்டு வெளியே வர வில்லையானால் ஆபரேஷன் செய்யும்படி சொல்லி விட்டார்கள். நான் மிகுந்த கண்ணீருடன் 'இயேசு விடுவிக்கிறார்' ஊழியர்களோடு தொடர்பு கொண்டு ஜெபித்ததும் எந்த விதமான ஆபரேஷனும் இல்லாமல் அந்த ஐந்து ரூபாய் நாணயம் வெழியே வர தேவன் கிருபை செய்தார். - A. R. Fernando.

### ஜெபத்தை கேட்டார்!



எனது மகன் ஒரு கடை அறையை கூலிக்கு எடுத்து வியாபாரம் செய்து வந்தார். அந்த கடை அறையை நமக்கென்று சொந்தமாக எடுக்க 'இயேசு விடுவிக்கிறார்' ஊழியர்களோடு பெண்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு ஜெபித்த போது, அந்த கிழமையே அந்த கடை அறை சொந்தக்காரர் மிக குறைவான விலைக்கு அதை விற்க தேவன் அவரது மனதில் கிரியை செய்தார். - Janaki.



### மீட்டுக் கொடுத்தார்!

எனது காணி ஒன்று மட்டக்கழப்பு பிரதேசத்தில் இருந்தது. ஆனால் அங்குயிருந்து சில வருடங்களுக்கு முன்பு வந்து விட்டோம்.

பின்பு அங்குயிருக்கும் சில அதிகாரிகளினால் அதை பலவந்தமாக சொந்தமாக்கிக் கொண்டு எங்களுக்கு தர இயலாது என ஆர்ப்பாட்டம் செய்தார்கள். ஆனால், நான் 'இயேசு விடுவிக்கிறார்' ஊழியர்களோடு பெண்கள் கூட்டத்துடன் தொடர்பு கொண்டு ஜெபித்து கடந்து சென்றேன். தேவன் அதிகாரிகள் மனதில் கிரியை செய்து காணி எங்களுக்கு கிடைக்க செய்தார். - Suguna.

### விடுதலை கொடுத்தார்!

ரூமு இல் இருந்த எனது மருகனின் விசா முடிவுற்ற நிலையில் அவர் கைது செய்யப்பட்டு, கைகளில் விலங்கிடப்பட்டு, விமானத்தில் இலங்கைக்கு கொண்டு போவதாக இருந்த நிலையில் அவர் தேவனை துதித்துக் கொண்டிருந்தார். அற்புத விதமாக அவர் விடுதலை செய்யப்பட்டார். - Vinifreeda.


## கொழும்பில்



இயேசு விடுவிக்கிறார்

# திறப்பின் வாசல் ஜெபம்

நாள்: 2016 **நவம்பர் 5**
(சனிக்கிழமை)
நேரம்: **காலை 9:00 - மதியம் 2:00.**

இடம்:
**காலி முக கிறிஸ்து நாதர் ஆலய மண்டபம்,**
*Galle Face Christ Church Hall, Colombo - 03,*
*(Near The Ramada Hotel)*

தேவ செய்தியும், ஜெபமும்:

## சகோ. R. ஜெபசிங்



அன்புப் போதகர்களே... ஜெப வீரர்களே! நம் தேசத்திற்காக ஜெபிக்கலாம் வாருங்கள்...

நேரில் வர முடியாதவர்கள், உங்கள் தனிப்பட்ட, குடும்ப மற்றும் ஆவிக்குரிய பிரச்சனைகளுக்காக ஜெபிக்க வேண்டுமானால், கடிதம் மூலமாகத் தெரியப்படுத்தலாம். உங்களுக்காக ஜெபித்து, கர்த்தர் கொடுக்கும் பதிலை உங்களுக்கு அனுப்புவோம்.

**கர்த்தர் உங்கள் சிறையிருப்பை மாற்றுவார்.**

முகவரி: *57/36A, P.O. 108, Thimbirigasyaya Road, Hendala, Wattala, SRILANKA.*
*Ph: 011-2930 152.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் பகுதி!

# புத்தியுள்ள ஸ்திரீ!



சிறப்புச் செய்தி:
**சகோதரி ஜாய்ஸ் லாசரஸ்.**

**அ**ன்பார்ந்த சகோதரிகளே,

கடந்த (2016) செப்டம்பர் இதழில், "நான் வசதியான ஒரு குடும்பத்தில் பிறந்தவள். என் பெற்றோருக்கு நான்தான் மூத்த பிள்ளை. என்னுடைய வாழ்க்கையில், நான் நினைத்துக் கூடப் பார்த்திராத அனேகக் காரியங்களை கர்த்தர் செய்து கொண்டிருக்கிறார். "நான் ஒரு ஊழியக்காரருக்கு மனைவியாவேன்!" என்றோ, "கர்த்தருடைய ஊழியத்தைச் செய்யக் கூடிய பாக்கியம் எனக்குக் கிடைக்கும்!" என்றோ, நான் கனவிலும் நினைத்துப் பார்த்ததில்லை. இயேசு கிறிஸ்து என் ஆவிக்குரிய கண்களைத் திறந்திருக்கிறார்!" என்று வாசித்து முடித்திருப்பீர்கள்.

**இதோ, அதன் தொடர்ச்சி...**

என் வாழ்க்கையில், நான் இயேசு கிறிஸ்துவைக் கண்டு கொண்டேன். அவர்தான் எனக்கு நல்ல ஒரு தகப்பனாக, ஒரு தாயாக இருந்து, என்னை இந்நாள் வரை நடத்திக் கொண்டிருக்கிறார்.

நான் ஜெபிக்கும் போதெல்லாம், "ஆண்டவரே, உமக்கு ஊழியம் செய்யக் கூடிய பாக்கியத்தை எனக்குக் கொடுத்திருக்கிறீர். நீர் தருகிற ஆசீர்வாதம் ஒன்றே எனக்குப் போதும். என் வாழ்நாள் முழுவதும் உமக்கு முன்பாக நான் உண்மையாக வாழ எனக்குக் கிருபை தாரும்." என்று அடிக்கடி கர்த்தரிடத்தில் கேட்பதுண்டு. அப்பொழுதெல்லாம் கர்த்தர், "பயப்படாதே, நான் உனக்குப் போதுமானவராக இருப்பேன்." என்று, என்னோடு மிகுந்த ஆறுதலாகப் பேசுவார்.

என் தகப்பனார் வீட்டில் சொத்துப் பிரச்சனை வந்தபோது, "கர்த்தர் எனக்குப் போதும். முடிவு பரியந்தம் அவர் என்னை நடத்த வல்லமை உள்ளவராக இருக்கிறார். எனக்கு எதுவும் தேவையில்லை." என்று அன்போடு அவர்களிடத்தில் நான் சொல்லி விட்டேன். இந்நாள் வரை கர்த்தர் என்னை அற்புதமாக நடத்தி வருகிறார். ஒரு குறைவுமில்லாமல், அனேக மக்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கும்படியாக, கர்த்தர் என்னை வைத்திருக்கிறார்.

நாம் பொருளாசை இல்லாதவர்களாக இருந்து, கர்த்தரை மட்டுமே சார்ந்து வாழ வேண்டும். அது ஒன்றுதான் நிலையானது.

இன்றைக்கு உங்களுடைய உள்ளத்திற்குள் பொருளாசை இருக்குமானால், ஒப்புக் கொடுத்து ஜெபியுங்கள். கர்த்தர் நம்முடைய வாழ்க்கையில் செய்கிற அதிசயங்களைக் காண, நம்முடைய மனக் கண்கள் திறக்கப்பட வேண்டும்.

இன்றைக்கு, பலவிதமான பணத் தேவைகளுக்கு மத்தியில் நீங்கள் வாழ்ந்து கொண்டிருக்கலாம். ஒன்றை அறிந்து கொள்ளுங்கள், நம்முடைய தேவைகளில் நமக்கு உதவி செய்கிற கர்த்தர், எப்பொழுதும் ஆயத்தமாகவே இருக்கிறார்.

நாம் கர்த்தரைத் தேடி அவருடைய சமூகத்திற்குப் போய், "எனக்கு இந்தக் காரியத்தில் உதவி செய்யும், ஆண்டவரே..." என்று கேட்கும்போது, கர்த்தர் நமக்கு உதவி செய்ய ஆயத்தமாக இருக்கிறார். காரணம், கர்த்தருடைய கண்கள் எப்பொழுதும் நம் மீது வைக்கப்பட்டிருக்கிறது.

## நம்மைக் காண்கிற தேவன்!

**"தேவன் அவளுடைய (ஆகாரின் ) கண்களைத் திறந்தார்."**
**ஆதி. 21:19.**

ஆபிரகாமின் மனைவியாகிய சாராளின் அடிமைப் பெண்தான் **ஆகார்**. சாராளுக்குப் பிள்ளை இல்லாமல் இருந்தபடியினால், சாராள் தன் கணவனாகிய ஆபிரகாமுக்கு தன் அடிமைப் பெண்ணாகிய ஆகாரை மனைவியாகக் கொடுத்தாள். அவள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெற்று, அவனுக்கு 'இஸ்மவேல்' என்று பெயரிட்டாள்.

சில ஆண்டுகள் கழித்து, கர்த்தருடைய வாக்குத்தத்தப் புத்திரனாகிய **ஈசாக்கை** சாராள் பெற்றாள். ஈசாக்கும், இஸ்மவேலும் வளர்ந்து வருகிற காலத்தில், இஸ்மவேலுடைய நடவடிக்கைகள் சாராளுக்குப் பிடிக்காமல் போயிற்று.

அதனால் கோபமடைந்த சாராள், ஆபிரகாமிடத்தில் போய், "நீர் வைத்திருக்கிற அடிமைப் பெண்ணையும், அவளுடைய மகனையும் நீர் வெளியே அனுப்பி விடும்." என்று சொன்னாள். உடனே ஆபிரகாம் கர்த்தருடைய சமூகத்திற்குப் போய் விசாரித்தபோது, "நீ உன் மனைவி சொல்கிறபடி கேள்." என்று கர்த்தர் சொன்னபடியினால், அவருடைய வார்த்தைக்குக் கீழ்படிந்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பத்தையும், ஒரு துருத்தியில் தண்ணீரையும் நிரப்பிக் கொடுத்து, அவர்களை வனாந்திரத்திற்கு அனுப்பி விட்டார்.

அவள் பெயர்செபாவின் வனாந்திரத்தில் அலைந்து திரிந்து கொண்டிருந்தபோது, அவள் கொண்டு போயிருந்த தண்ணீர் தீர்ந்து விட்டது. அப்பொழுது, அவளுடைய பிள்ளை தாகமடைந்து தண்ணீர் கேட்டு அழுதபோது, தன் பிள்ளைக்கு தண்ணீர் கொடுக்க வழியில்லாமல், பிள்ளை தாகத்தினால் சாகிறதைப் பார்க்க மாட்டாமல், தன் பிள்ளையை விட்டுக் கொஞ்சம் தூரமாகப் போய் நின்று கொண்டு, மகா சத்தமிட்டு அழுதாள். அவர்களுடைய அந்த அழுகையின் சத்தத்தைக் கேட்ட கர்த்தர், அந்த இடத்தில் அற்புதமான ஒரு தண்ணீர் துரவை உண்டாக்கி, அவர்களுடைய தாகத்தைத் தீர்த்தார். **(ஆதி. 21:9-19).**

அன்றைக்கு அந்த ஆகாரின் சத்தத்தைக் கேட்ட கர்த்தர், இன்றைக்கும் ஜீவனுள்ளவராக இருக்கிறபடியினால், நம்முடைய சத்தத்தையும் கேட்பார். அன்றைக்கு ஆகாருக்கு ஒரு தண்ணீர் துரவைக் காண்பித்த கர்த்தர், நமக்கும் ஒரு தண்ணீர் துரவைக் காண்பிப்பார். அதை நாம் விசுவாசிக்க வேண்டும்.

ஒரு சமயம், சென்னைப் பட்டணத்தில் ஒரு குடும்பத்தாரை நான் சந்தித்தேன். அவர்களுக்கு ஒரு ஆணும், பெண்ணுமாக இரண்டு பிள்ளைகள் இருந்தார்கள். மகள் டாக்டருக்குப் படித்து முடித்திருந்தாள். ''அவளுக்குத் திருமணம் செய்ய வேண்டும்.'' என்று அவளுடைய பெற்றோர் பேசிக் கொண்டிருந்தார்கள். உடனே நான், ''அவசரப்படாதீர்கள்.'' என்று சொன்னேன். அந்தப் பெண்ணின் தாயார், ''மகளுக்கு மாப்பிள்ளை பாருங்கள்.'' என்று தன் கணவரிடம் சொல்லும் போதெல்லாம், ''ஏற்ற வேளையில் கர்த்தர் கொண்டு வருவார்.'' என்று அவர் சொல்வார்.

நாங்கள் எல்லோருமாகக் கூடி ஜெபித்த வேளையில், அந்தப் பெண்ணின் திருமணக் காரியம் சம்மந்தமாக, கர்த்தர் ஒரு தரிசனத்தைக் காண்பித்தார். ஜெபம் பண்ணிய கொஞ்ச நாட்களுக்குள், கர்த்தர் காண்பித்த தரிசனத்தின்படியே, அந்தப் பெண்ணுக்கு திருமணக் காரியம் ஒழுங்கானது. மிகுந்த ஆசீர்வாதமாக அவளுடைய திருமணத்தைக் கர்த்தர் நடத்திக் கொடுத்தார்.

இன்றைக்கு ஒருவேளை, உங்கள் பிள்ளைகளுக்கு இன்னும் திருமணக் காரியம் ஒழுங்காகாத நிலைமையில் நீங்கள் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கலாம். அல்லது உங்கள் பிள்ளைகளுக்கு, அவர்களுடைய படிப்பிற்கேற்ற நல்லதொரு வேலை கிடைக்காமல் இருக்கலாம்.

**கவலைப்படாதீர்கள்.** கர்த்தரிடத்தில் கேளுங்கள். ஆகாரின் கண்ணீருக்கு இரங்கிய தேவன், உங்களுக்கும் இரங்குவார். நீங்கள் எதிர்பார்த்திருக்கிற காரியங்களில் கர்த்தர் நிச்சயமாகவே அற்புதங்களைச் செய்வார்.

## கண்கள் திறக்கப்பட வேண்டும்!

**"...எலிசா விண்ணப்பம்பண்ணி: கர்த்தாவே, இவன் பார்க்கும்படி இவன் கண்களைத் திறந்தருளும் என்றான்;"** 2 இராஜா. 6:17.

**எலிசா** தீர்க்கதரிசியின் காலத்தில், சீரியா தேசத்தின் ராஜா இஸ்ரவேல் தேசத்தின் மீது படையெடுத்து, அந்த தேசத்தை தன்னுடையதாக்கிக் கொள்ள, தன்னுடைய ஊழியக்காரரோடு பல ஆலோசனைகளைச் செய்தான்.

அப்படியாக அவன், பல முறை அந்தரங்கத்தில் இரகசியமாக ஆலோசனை செய்து கொண்டிருந்த காரியங்களை எல்லாம், கர்த்தர் அப்படியே எலிசா தீர்க்கதரிசிக்கு வெளிப்படுத்தினார்! உடனே எலிசா, கர்த்தர் தனக்கு வெளிப்படுத்திய எல்லாக் காரியங்களையும், இஸ்ரவேல் தேசத்து ராஜாவினிடத்தில் ஆள் அனுப்பிச் சொல்லி, அவனை எச்சரித்து வந்தார். அவனும் எலிசா தனக்குச் சொல்லி அனுப்புகிற காரியங்களைக் கேட்டு, அதற்குக் கீழ்படிந்து, தன்னைக் காத்து கொண்டான்.

தான் எடுக்கிற அத்தனை முயற்சிகளும் தோல்வியில் முடிவதை அறிந்து குழம்பிப் போன சீரியா ராஜா, தன்னுடைய ஊழியக்காரர்களை அழைத்து, "உங்களில் யாரோ ஒருவன், இஸ்ரவேல் ராஜாவினிடத்தில் போய் இங்குள்ள காரியங்களைப் பற்றியெல்லாம் சொல்லிக் கொடுக்கிறான்! அவன் யார் என்று எனக்குக் கண்டுபிடித்துச் சொல்லுங்கள்." என்று கடிந்து கொண்டான்.

அப்பொழுது அவர்களில் ஒருவன், **"அப்படியில்லை;... ராஜாவே, நீர் உம்முடைய பள்ளி அறையிலே பேசுகிற வார்த்தைகளையும் இஸ்ரவேலிலிருக்கிற தீர்க்கதரிசியாகிய எலிசா இஸ்ரவேலின் ராஜாவுக்கு அறிவிப்பான்."** (2 இராஜா. 6:12) என்று சொன்னான்.

பாருங்கள், அந்த அளவிற்கு எலிசா தீர்க்கதரிசிக்கு கர்த்தர் இரகசியமான காரியங்களை எல்லாம் விளங்கப் பண்ணினார்.

அந்த வார்த்தையைக் கேட்ட சீரியா ராஜா எலிசாவின் மீது கடும் கோபம் கொண்டு, அவரை அழித்து விடத் திட்டமிட்டான். ஒருநாள் இரவு வேளையில், எலிசாவை அழிக்கும்படியாக தனது படையினரை அனுப்பினான். அவர்கள் எலிசா வசித்த பட்டணத்தைச் சுற்றிலும் வளைந்து கொண்டார்கள்.

அதைப் பார்த்த எலிசாவின் வேலைக்காரன் மிகவும் பயந்துபோய், **"ஐயோ, என் ஆண்டவனே, என்ன செய்வோம் என்றான்."** (2 இராஜா. 6:15).

அதற்கு எலிசா, **"பயப்படாதே; அவர்களோடிருக்கிறவர்களைப் பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம்..."** (2 இராஜா. 6:16) என்று சொல்லி விட்டு, **"கர்த்தாவே இவன் பார்க்கும்படி இவன் கண்களைத் திறந்தருளும்..."** (2 இராஜா. 6:17) என்று சொல்லி விண்ணப்பம் பண்ணினார்.

எலிசாவினுடைய அந்த விண்ணப்பத்தைக் கேட்ட கர்த்தர், உடனே எலிசாவின் வேலைக்காரனின் கண்களைத் திறந்தார். அப்பொழுது, அவர்கள் வசித்த அந்த மலை, அக்கினி மயமான குதிரைகளாலும், இரதங்களாலும் நிறைந்திருக்கிறதை அவன் கண்டான். (2 இராஜா. 6:17).

**தொடரும்...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நாலுமாவடி - திறப்பின் வாசல் ஜெப சாட்சிகள்!

# கேளுங்கள், பெற்றுக் கொள்வீர்கள்!

"கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; ...கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்;" (மத்தேயு 7:7,8) என்று, இயேசு கிறிஸ்து வாக்குக் கொடுத்திருக்கிறார். நீங்கள் கேட்பதை உங்களுக்குக் கொடுக்க, இயேசு ஆயத்தமாயிருக்கிறார்.

இன்றைக்கு உங்களுக்கு என்ன வேண்டும்? சுகம் வேண்டுமா? ஜெயம் வேண்டுமா? வேலை வேண்டுமா? குழந்தை பாக்கியம் வேண்டுமா? உங்களுக்கு என்ன வேண்டுமோ, இயேசுவிடம் கேளுங்கள். தேவ பிள்ளைகளாகக் கூடி, சேர்ந்து கேட்கத்தான், கர்த்தர் திறப்பின் வாசல் ஜெபத்தை ஏற்படுத்தியிருக்கிறார். கடந்த நாட்களில் கேட்டுப் பெற்றுக் கொண்டவர்களைப் பாருங்கள்:

## சொன்னபடியே செய்தார்!

எனது வலது பக்க **சிறுநீரகத்தில்** இருந்த **2 கற்களின் நிமித்தமாக,** மிகவும் கஷ்டப்பட்டேன். ஜெப வேளையில், சிறுநீரகத்தில் பிரச்சனையோடு வந்திருந்தவர்களின் சுகத்திற்காக, நமது சகோதரர் அவர்கள் ஜெபித்தார்கள்.



நானும் இணைந்து ஜெபித்தேன். ஜெபித்து விட்டு, "கர்த்தர் சுகம் கொடுத்து விட்டார்! நீங்கள் மருத்துவமனைக்குச் சென்று பரிசோதித்துப் பார்த்து விட்டு வந்து சாட்சி சொல்லுங்கள்." என்று சொன்னார்கள்.

நானும் அப்படியே 'ஸ்கேன்' பண்ணிப் பார்த்தபோது, சிறுநீரகத்திலிருந்த **2 கற்களையும்** கர்த்தர் **மறையச் செய்து**, எனக்குப் **பூரண சுகத்தைக்** கொடுத்தார். – **ஜெயப் பிரபா, திசையன்விளை.**

## தூரத்திற்கும் தேவன்!

நான் கர்ப்பமாக இருந்த சமயத்தில் பரிசோதித்துப் பார்த்தபோது, **குழந்தை வளர்ச்சி இல்லாமல்** இருந்ததைக் கண்டுபிடித்த டாக்டர்கள், 10 வாரங்களுக்கு முன்பாகவே அவசரமாக ஆபரேஷன் செய்து குழந்தையை வெளியே எடுத்து, **அவசர சிகிச்சைப் பிரிவில்** (I.C.U.) 2 மாதங்களாக வைத்து விட்டார்கள்.



இக்கட்டான நிலைமையில், **'இயேசு விடுவிக்கிறார்'** ஊழியத்திற்கு இ-மெயில் மூலமாகத் தொடர்பு கொண்டு, ஜெபிக்கக் கேட்டுக் கொண்டோம். அவர்களும் ஜெபித்து, ஆறுதலான வேத வசனத்தை அனுப்பி வைத்தார்கள்.

அதை வைத்து நாங்களும் தொடர்ந்து ஜெபித்தோம். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு, எல்லாப் **பிரச்சனைகளையும்** மாற்றி, முழு **வளர்ச்சியடைந்த** ஒரு **குழந்தை**யாக எங்கள் கையில் கொடுத்தார். **– ஜெரால்டின் மோகன், லண்டன்.**

## விடுதலை கொடுத்தார்!

எந்தவொரு **வேலையும் செய்ய முடியாத அளவிற்கு**, மிகக் கடுமையான **இடுப்பு வலி**யினால் **2** வருடங்களாகக் கஷ்டப்பட்டேன்.



என் **தங்கையும் அசுத்த ஆவியின் பிடி**யினால் பாதிக்கப்பட்டு, **4 மாதங்களாக வேதனை**ப்பட்டாள். ஜெப வேளையில், மிகுந்த பாரத்தோடு எங்கள் விடுதலைக்காக ஜெபித்தேன்.

கர்த்தர் எனக்கு **நல்ல சுகத்தை**யும், அசுத்த ஆவியின் பிடியிலிருந்து என் தங்கைக்கு **பூரண விடுதலை**யையும் கொடுத்தார். – R. **அமல் ஜார்ஜ்,** முளகுமூடு.

## ஜெபத்தைக் கேட்டு, அற்புதம்!

நான் கர்ப்பமாக இருந்தபோது, **"குழந்தையின் எடை** மிகக் **குறைவாக** இருப்பதால், **பிரசவிப்பது கடினம்."** என்று சொல்லி, ஒரு மாத காலமாக மருத்துவமனையில் வைக்கப்பட்டேன். எவ்வளவோ மருந்து-மாத்திரைகளைச் சாப்பிட்டும், எடை அதிகரிக்கவே இல்லை. ஆகவே, "உன்னால் முடியாது, குழந்தை பிறக்காது." என்றே டாக்டர்கள் சொல்லி விட்டார்கள்.



இந்நிலையில், எனது பாட்டி திறப்பின் வாசல் ஜெபத்தில் கலந்து கொண்டு, எனக்காக ஜெபித்தார்கள். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு, **சுகப் பிரசவத்தில்,** நல்ல **வளர்ச்சியடைந்த** ஒரு **குழந்தையைப் பெற்றெடுக்கக்** கிருபை செய்தார். **– V. ஜோஸ்பின், உச்சப்பட்டி.**

## ஜெபத்தைக் கேட்டார்!

என் குழந்தை பிறந்த 2வது நாளிலிருந்து, குழந்தைக்கு அடிக்கடி **வலிப்பு** (Fits) வந்தது. பரிசோதித்த டாக்டர்கள், "குழந்தையின் தலைப் பகுதிக்குள் ஒரு பிரச்சனை இருக்கிறது. M.R.I. ஸ்கேன் செய்து பார்க்க வேண்டும்." என்று சொன்னார்கள். மிகுந்த மன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதனையோடு, நாங்கள் திறப்பின் வாசல் ஜெபத்தில் கலந்து கொண்டு, பாரத்தோடு ஜெபித்தோம். அதற்குப் பிறகு பரிசோதித்துப் பார்த்தபோது, "குழந்தைக்கு **எந்தப் பிரச்சனையும் இல்லை**. எல்லாம் நன்றாக இருக்கிறது." என்று டாக்டர்கள் சொல்லும்படியாக, கர்த்தர் கிருபை செய்தார். **- மாலதி**, நாலுமாவடி.

## வியாதிப் படுக்கையை மாற்றினார்!

எங்கள் பக்கத்து வீட்டில் இருக்கிற, 'இராஜேஸ்வரி' என்கிற ஒரு சகோதரி, திடீரென்று **பக்கவாத நோயினால்** பாதிக்கப்பட்டு, **படுத்த படுக்கைக்குள்ளானாள்.**



நான் அவளிடத்தில், "நீ இங்கிருந்து கொண்டே ஜெபம் பண்ணு. நான் திறப்பின் வாசல் ஜெபத்திற்குச் சென்று, உனக்காக ஜெபித்து விட்டு வருகிறேன்." என்று சொல்லி விட்டு, அந்த ஜெபத்தில் கலந்து கொண்டு, அவளுக்காக ஜெபக் குறிப்பு எழுதிக் கொடுத்து, ஜெபித்து விட்டு வந்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு, அவளுடைய **வியாதிப் படுக்கையை மாற்றி**, அவளுக்கு **நல்ல சுகத்தைக்** கொடுத்தார்.

இதன் நிமித்தமாக அவள் **இயேசுவை ஏற்றுக் கொண்டு, இரட்சிக்கப்பட்டு**, ஞானஸ்நானமும் பெற்று, எங்களோடு கூட ஆலயத்திற்கு வந்து தேவனை ஆராதித்துக் கொண்டிருக்கிறாள். **- பிரேமா ஜெயந்தன்**, திருவனந்தபுரம்.

## அற்புதங்களைச் செய்தார்!

என்னுடைய சகோதரன், **பில்லி-சூனியக் கட்டினாலும்**, கடுமையான மன **அழுத்தத்தினாலும்** பாதிக்கப்பட்டு, **வெளியே எங்கும் செல்லாமல்**, வேலைக்கும் போக முடியாமல், **3½ வருடங்களாக** வீட்டிற்குள்ளேயே **முடங்கிக் கிடந்தான்.**



நான் திறப்பின் வாசல் ஜெபத்தில் கலந்து கொண்டு, தொடர்ந்து அவனுக்காக மிகுந்த பாரத்தோடு ஜெபித்து வந்தேன். கர்த்தர் அவனுக்குப் **பரிபூரணமான விடுதலையைக்** கொடுத்து, மீண்டும் அவன் **வேலைக்குப் போக** கிருபை செய்தார்.

மட்டுமல்ல, எனக்குத் தெரிந்த ஒரு **தாயார்** திடீரென்று **காணாமல் போய்** விட்டார்கள்.

அவர்களைக் **கண்டுபிடிக்க முடியாமல்**, ஒரு மாத காலமாக அவர்களுடைய குடும்பத்தார் தவித்துக் கொண்டிருந்த வேளையில், நான் திறப்பின் வாசல் ஜெபத்தில் கலந்து கொண்டு, அவர்களுக்காக ஜெபித்து விட்டுச் சென்றேன். கர்த்தர் கிருபையாக அவர்கள் **இருக்கும் இடத்தை அறிந்து** கொள்ள உதவி செய்தார். **- எஸ்தர்**, பொள்ளாச்சி.

## முடியாததை முடியச் செய்தார்!

எனக்குத் திருமணமாகி **3½ வருடங்களாகியும், குழந்தை இல்லாமல்** இருந்தது. எத்தனையோ மருத்துவமனைகளுக்குச் சென்று பார்த்தோம். பரிசோதித்த டாக்டர்கள் எல்லோருமே, "உங்கள் **கர்ப்பப் பைக்குப்** போகிற குழாயில் ஜவ்வு **அடைத்திருக்கிறது.**



ஆகவே, தானாக உங்களுக்குக் குழந்தை உண்டாக வாய்ப்பில்லை. அப்படியே 'வேண்டும்.' என்றால், **Test Tube** குழந்தைக்குத்தான் வாய்ப்பிருக்கிறது. அதற்கு ₹ 1½ லட்சம் செலவாகும். ஆனால், எங்களால் அதற்கான உத்தரவாதம் கொடுக்க முடியாது." என்றுதான் சொன்னார்கள்.

அதற்கு நாங்கள், "எப்படியிருந்தாலும் பரவாயில்லை. எங்களுக்குக் குழந்தை வேண்டும்." என்று சொல்லி, **Test Tube** குழந்தைக்கு சம்மதித்து, அதற்கு ஆயத்தமானோம். டாக்டர்கள் மறுபடியுமாக ஒருநாள் வரச் சொல்லி, எங்களை அனுப்பி விட்டார்கள்.

நாங்கள் வீட்டிற்குப் போய், **'இயேசு விடுவிக்கிறார்'** ஜெப ஊழியத்திற்குக் கடிதம் எழுதி, ஜெபிக்கக் கேட்டுக் கொண்டோம். அவர்களும் ஜெபித்து, ஆறுதலான பதிலை அனுப்பி இருந்தார்கள்.

நாங்களும் மிகுந்த ஜெபத்தோடு டாக்டர்கள் குறித்த நாளில் பார்க்கப் போனோம்.

என்ன ஆச்சரியம்! டாக்டர்கள் பரிசோதித்துப் பார்த்து விட்டு, "நீங்கள் **கர்ப்பம் தரித்திருக்கிறீர்கள்!**" என்று சொன்னார்கள். ஏற்ற வேளையில் சுகப் பிரசவத்தில், நல்ல ஒரு ஆண் **குழந்தையைப் பெற்றெடுக்கவும்** கர்த்தர் கிருபை செய்து, முடியாததை முடியச் செய்தார். - S. **சுமதி**, சென்னை.

**இவர்களுக்கு அற்புதம் செய்த கர்த்தராகிய இயேசு, உங்களுக்கும் அற்புதம் செய்வார்! உங்கள் காரியம் எதுவாக இருந்தாலும், அந்தக் காரியத்தை கடிதத்தில் எழுதி, பின்கோடுடன் கூடிய உங்கள் தெளிவான முகவரியோடு எங்களுக்கு அனுப்பி வையுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிப்போம். நீங்களும் இந்த நாளில் உபவாசித்து, விசுவாசத்தோடு ஜெபியுங்கள். இயேசு உங்களுக்கும் அற்புதம் செய்து, உங்கள் துக்கத்தை மாற்றுவார். திறப்பின் வாசல் ஜெப தினத்தன்று, காலை 9:00 - மாலை 3:00 மணிவரை ஜெபிப்போம். நீங்களும் இதே நேரத்தில் எங்கிருந்தாலும் ஜெபியுங்கள். ஜெபத்தில் கர்த்தர் உங்களுக்குக் கொடுக்கும் பதிலை உங்களுக்குத் தெரியப்படுத்துவோம்.** - உங்கள் சகோதரன்.

நாலுமாவடி-திறப்பின் வாசல் ஜெபம்!

**உங்கள் அற்புதத்தின் நாள்:**

# அக்டோபர் 29

(கடைசி சனிக்கிழமை)

**Address: Standing in the Gap Prayer, Nalumavadi-628 21**
**Thoothukudi Dist., India.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்நாடு - வேலூர் மாவட்டம்

# பேர்னாம்பட்டில் இயேசு!

## கிராமத்தில் கூடி வந்த 30,000 மக்கள்!

**"சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்."** (மாற்கு 16:15) என்ற கர்த்தருடைய பிரதான கட்டளைக்குக் கீழ்படிந்து. தேசமெங்கும் சுவிசேஷத்தை அறிவித்து வருகிறோம்.

சர்வ சமயத்தவரும் ஒன்றாகக் கூடி வாழ்கிற, வேலூர் மாவட்டம்-**பேர்னாம்பட்டில்**, கடந்த (2016) ஆகஸ்ட் 30, 31 தேதிகளில் நடைபெற்ற **விடுதலைப் பெருவிழா**, மெய்யாகவே அந்தப் பகுதியில் மிகுந்த ஆசீர்வாதத்தைக் கொண்டு வந்தது.

இயற்கை எழில் மிகுந்த பேர்னாம்பட்டின் சுற்றுப் புறக் கிராமங்களிலிருந்து, ஜாதி, மத, இன பேதமின்றி, திரளான ஜனங்கள் கிறிஸ்துவின் நற்செய்தியைக் கேட்கவும், தங்கள் ஆவி, ஆத்துமா, சரீரத்தில் விடுதலையையும், சுகத்தையும் பெற்றுக் கொள்ளவும் கூடி வந்திருந்தனர்.

அனேக தேவப் பிள்ளைகள் 40 நாட்கள் தொடர்ந்து உபவாசித்து, இந்தக் கூட்டத்தின் ஆசீர்வாதத்திற்காக ஜெபித்தார்கள். மழை பெய்த போதிலும், தடையில்லாதபடி இரண்டு நாட்களும் கூட்டத்தை நடத்தி முடிக்கக் கர்த்தர் கிருபை செய்தார்.

முதல் நாளில், **"சந்தோஷம் தரும் இயேசு!"** என்கிற தலைப்பிலும், இரண்டாவது நாளில், **"யார் செய்த பாவம்?"** என்கிற தலைப்பிலும், நமது சகோதரர் **மோகன் சி. லாசரஸ்** அவர்கள், கர்த்தருடைய வார்த்தையைப் பகிர்ந்து கொண்டார்கள். தேவ செய்திகளைக் கேட்ட ஜனங்கள், **"இயேசுவே, மெய்யான தெய்வம்!"** என்பதை அறிந்து கொண்டார்கள்.

ஜெப வேளையில், அனேகர் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, இயேசுவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டனர். கர்த்தர் பலத்த அற்புதங்களை ஜனங்கள் மத்தியில் செய்தார். கண் பார்வையற்றவர்கள், நடக்க முடியாதவர்கள், கட்டிகளால் அவதிப்பட்டவர்கள், பிசாசின் பிடியில் சிக்குண்டவர்கள் மற்றும் சாபக் கட்டுகளில் சிக்கியிருந்த அனேகர், இயேசுவின் வல்லமையால் தொடப்பட்டு, விடுதலையையும், சுகத்தையும் பெற்றுக் கொண்டனர். அற்புதங்களைப் பெற்றுக் கொண்டவர்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனேகர் சாட்சி சொல்லி, கர்த்தரை மகிமைப்படுத்தினார்கள். இக்கூட்டத்திற்கான அனைத்து ஏற்பாடுகளையும், சகோ. **தினகரன்** ('இயேசு நேசிக்கிறார்' ஜெபக் குழு) அவர்களோடு இணைந்து, பல தேவ பிள்ளைகள் மிகுந்த ஜெபத்தோடும், பிரயாசத்தோடும் ஒழுங்கு செய்திருந்தார்கள். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக! - கூட்ட ஒருங்கிணைப்பாளர்.



சகோ. தினகரன்



மேடையில் தேவ ஊழியர்களோடு நமது சகோதரர்

## பேர்னாம்பட-விடுதலைப் பெருவிழாவில் இயேசு செய்த அற்புதங்களில் சில...

### மூல வியாதி சுகமானது!



உள் **மூல வியாதி**யினால், **2 வருடங்களாக மரண அவஸ்தை**ப்பட்டேன். கொஞ்சம் காரம் பட்டால் கூட தாங்க முடியாத வேதனை உண்டாகும். 'மூலம்' என்கிற அந்த சதை, ஒரு **கட்டி**யைப் போல ஆசன வாய் வழியாக வெளியே **பிதுங்கிய** நிலையில், சொட்டுச் சொட்டாக **இரத்தம் வெளியேறும்**. இதன் நிமித்தமாக நான் பட்ட **வேதனை சொல்லி மாளாது**. எவ்வளவோ மருந்துகளைச் சாப்பிட்டும், சுகம் கிடைக்கவில்லை. ஜெப வேளையில், மிகுந்த கண்ணீரோடு ஜெபித்தேன். கர்த்தர் **பூரணமான சுகத்தை**க் கொடுத்தார். - **சகேயு,** கொத்தமாரிக்குப்பம்.



### தற்கொலை எண்ணம் மாறியது!



**அசுத்த ஆவியின்** தூண்டுதலினால், "**தற்கொலை செய்து கொள்ள** வேண்டும்." என்கிற எண்ணம், சில மாதங்களாகவே எனக்குள் இருந்தது. ஜெப வேளையில், சகோதரர் அவர்கள் மூலமாக ஆவியானவர் என்னைப் **பெயர் சொல்லி அழைத்து**, அந்த எண்ணத்திலிருந்து எனக்கு ஒரு **முழுமையான விடுதலை**யைக் கொடுத்தார். - **கஸ்தூரி,** குண்டல்பள்ளி.

### கண்ணீரைக் கண்ட கர்த்தர்!



என் வயிற்றுப் பகுதியில் ஏற்கெனவே ஒரு கட்டி ஆபரேஷன் செய்து எடுக்கப்பட்டிருந்தது. அடுத்தபடியாக, **இடுப்புப் பகுதியில்** ஒரு **கட்டி** வந்து விட்டது. **இடுப்பெலும்புப் பகுதியிலும் வலி** இருந்தபடியினால், சரிந்து படுக்க முடியாமல் **5 வருடங்களாக** மிகவும் கஷ்டப்பட்டேன். ஜெப வேளையில் கர்த்தர் என்னைத் தொட்டு, **வலியை நீக்கி**, அந்தக் **கட்டி**யையும் **மறையச்** செய்தார். - **தங்கமணி,** ஏரிக்குத்தி.

### வேதனையை மாற்றினார்!



**முதுகு வலி**யினால் **உட்காரவே முடியாத** அளவிற்கு, **6 மாதங்களாக** மிகவும் கஷ்டப்பட்டேன். கூட்டத்திலும் நின்று கொண்டேதான் இருந்தேன். **கால்களையும் மடக்க முடியவில்லை**. ஜெப வேளையில், சகோதரர் அவர்கள் மூலமாக ஆவியானவர் என்னை **பெயர் சொல்லி அழைத்து**, எனக்கு சுகம் தருவதாகச் சொன்னபோது, தேவ வல்லமை என் மீது பலமாக இறங்கியது. அப்பொழுது **வேதனைகள்** எல்லாம் **நீங்கி**, நல்ல **சுகத்தை**ப் பெற்றுக் கொண்டேன். - **செல்வி,** நாச்சார்குப்பம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அற்புத சுகம் உண்டானது!



நான் நடக்கும் போதெல்லாம், இரண்டு கால் **மூட்டுப் பகுதிகளில்** ஒரு விதமான **சத்தம்** வரும். ஒன்றரை மாதங்களாக **மூட்டு வலியினாலும்** கஷ்டப்பட்டேன். வலியோடுதான் கூட்டத்தில் கலந்து கொண்டேன். ஜெப வேளையில், தேவ வல்லமை என்னை முழுவதுமாக ஆட் கொண்டது. அப்பொழுது என் கால் மூட்டுப் பகுதிகளில் **ஒரு மாற்றம்** உண்டாவதை உணர்ந்தேன். அந்நேரமே நல்ல **சுகத்தைப் பெற்றுக்** கொண்டேன்.
**- இலக்கியா, கொத்தமாரிக்குப்பம்.**

## ஆஸ்துமா சுகமானது!



**ஆஸ்துமா**வினால் நான் பாதிக்கப்பட்டு, **மூச்சு விட முடியாமல்**, 2 வருடங்களாகக் கஷ்டப்பட்டேன். தினந்தோறும் மாத்திரை சாப்பிட்டும், சுகம் கிடைக்கவில்லை. ஜெப வேளையில், தேவ வல்லமை என் மீது பலமாக இறங்கியது. அந்நேரமே **பூரண சுகத்தை**ப் பெற்றுக் கொண்டேன். **- மரியா.**

## காதுகளுக்குள் அற்புதம்!



என் 2 **காதுகளுக்குள்**ளும் 4 வருடங்களாக **ஓயாத இரைச்சலாக**வே இருந்தது. யாராவது பேசினால் **தெளிவாகக் கேட்காது**. டாக்டர்கள், "காதுக்குள் இருக்கிற ஜவ்வில் ஓட்டை விழுந்திருக்கிறது. ஆபரேஷன்தான் செய்ய வேண்டும்." என்றார்கள். ஜெப வேளையில், ஒரு மின்சாரத்தைப் போல தேவ வல்லமை என்னைத் தொட்டது. அந்நேரமே என் 2 காதுகளிலும் **தெளிவாகக் கேட்கும் திறன் உண்டானது.**
**- வில்சன் ராஜா, வளத்தூர்.**

## 10 வருட, செவிட்டுக் காது திறந்தது!



என் வலது **காது**, சுமார் **10 வருடங்களாக** சுத்தமாகக் **கேட்காது**. டாக்டர்கள், "உங்கள் சரீர பெலவீனத்தினால்தான் காது பாதிக்கப்பட்டிருக்கிறது. ஒன்றும் செய்ய முடியாது." என்று சொல்லி விட்டார்கள். ஜெப வேளையில், கர்த்தருடைய கரம் என் காதைத் தொட்டதைப் போல உணர்ந்தேன். அந்த வினாடியே அந்தக் காது **தெளிவாகக் கேட்கும் திறனைப்** பெற்றது.
**- அந்தோணியம்மா.**

## தெளிவான பார்வையை தந்தார்!



பிறந்ததில் இருந்தே என் வலது **கண் பார்வை தெரியாது**. டாக்டர்கள், "அந்தக் கண்ணில் உள்ள லென்ஸ் வளர்ச்சி இல்லை. அதை ஒன்றும் செய்ய முடியாது." என்று சொல்லி விட்டார்கள். ஜெப வேளையில், என் தாயார் சொன்னபடியே அந்தக் கண்ணில் கை வைத்து விசுவாசத்தோடு ஜெபித்தேன். கர்த்தர் என் கண்ணைத் தொட்டு, **தெளிவான பார்வைக்** கொடுத்தார். **- டேனியேல் மோசஸ்.**

## பூரண சுகம் தந்தார்!



**சிக்கன்குனியா** காய்ச்சலினால் நான் பாதிக்கப்பட்டு, எல்லா **எலும்புகளும், நரம்புகளும் செயலிழந்து** போய், கை-கால்களை **மடக்க முடியாத நிலைமைக்குள்ளாகி**, 3 வருடங்களாக என்னால் **எதுவுமே செய்ய முடியாமல்** ஆகி விட்டது. யாராவது என்னைத் தூக்கித்தான் உட்கார வைக்க வேண்டும், படுக்க வைக்க வேண்டும், எழுப்பி விட வேண்டும். எத்தனையோ சிகிச்சைகளை செய்தும், சுகம் கிடைக்கவில்லை. என் தகப்பனார்தான் என்னை கூட்டத்திற்குக் கூட்டிக் கொண்டு வந்தார்கள். ஜெப வேளையில் கர்த்தருடைய கரம் என்னைத் தொட்டு, **பூரண சுகத்தைக்** கொடுத்தது.
**- ஸ்ரீதேவி பார்த்திபன்.**

## வேதனைகள் நீங்கியது!



என் **சரீரம் முழுவதும்** ஊசியினால் குத்துவது போல **குத்தலும், வலியுமாக** 3 வருடங்களாக **வேதனைப்**பட்டேன். இரவு வேளையில் **நிம்மதியாகத் தூங்க முடியாது. உட்கார்ந்தால் எழும்ப முடியாது. நடக்க முடியாது.** எவ்வளவோ சிகிச்சை செய்தும், சுகம் கிடைக்கவில்லை. என் **இடுப்புப் பகுதியில்** இருந்த ஒரு **கட்டியினாலும்** வேதனைப்பட்டேன். ஜெப வேளையில் தேவ வல்லமை என்னை பலமாக ஆட்கொண்டது. அந்நேரமே எல்லா **வேதனைகளும் மாறி, கட்டி மறைந்து**, நன்றாக **நடக்கவும் முடிந்தது. - ஞானசெல்வி.**

## நரம்புத் தளர்ச்சி மாறியது!



**நரம்புத் தளர்ச்சி**யினால் நான் பாதிக்கப்பட்டு, **நடக்கக் கூட முடியாமல்**, 2½ வருடங்களாகக் கஷ்டப்பட்டேன். மிகுந்த சிரமத்தின் மத்தியில், என் மனைவியின் கையைப் பிடித்துக் கொண்டுதான் கூட்டத்திற்கு வந்தேன். ஜெப வேளையில், தேவ வல்லமை ஜில்லென்று என் சரீரத்தில் இறங்கியது. அந்நேரமே **நல்ல சுகத்தைப் பெற்றேன்**. நன்றாக **நடக்க முடிகிறது. - ராஜ்குமார்.**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கெத்செமனே ஜெப மையம்

**GETHSEMANE PRAYER CENTRE**

உங்கள் சிறையிருப்பு மாற வேண்டுமா?

## தேசத்திற்காக ஜெபிக்க வாருங்கள்!

தனியாக...
குழுவாக...
சபையாக...
ஜெபிக்கலாம்...

## வத்தளையில்

**தினமும் காலை 9:00 மணிமுதல்,**
**மாலை 6:00 மணிவரை.**

### இதர ஊழியங்கள்!

**பெண்கள் ஜெபம்!**
(வியாழக்கிழமைதோறும்)
10:00 A.M. - 1:00 P.M.

**உபவாச ஜெபம்!**
(சனிக்கிழமைதோறும்)
10:00 A.M. - 1:00 P.M.



**குடும்ப ஆசீர்வாத கூடுகை!**
(ஒவ்வொரு மாதமும் போயா தினத்தன்று)
10:00 A.M. - 1:00 P.M.

**மாணவர்கள் கூடுகை!**
(3வது சனிக்கிழமைதோறும்)
4:00 P.M. - 5:00 P.M.

**சகோ. மோகன் சி. லாசரஸ்** அவர்களின் செய்திகள் அடங்கிய சிடீ.க்கள், புத்தகங்கள் கிடைக்கும்.

**கிளை அலுவலக முகவரி:** *57/36A, P.O. 108, Thimbirigasyaya Road, Hendala, Wattala, SRILANKA.*

உங்கள் அவசர **ஜெப அழைப்பிற்கு 011 - 2930 152, 071 437 1111** என்ற எண்ணிற்குத் தொடர்பு கொள்ளவும்.

## முக்கிய அறிவிப்பு!

'இயேசு விடுவிக்கிறார்' ஊழியத்துக்காக வீடுகளுக்கு சென்று காணிக்கை சேகரிக்க எந்த ஊழியரும் நியமிக்கப்படவில்லை. அப்படி செயல்படுவதற்கு யாருக்கும் அனுமதியும் கொடுக்கப்படவில்லை. கிளை அலுவலகங்களில் நேரடியாக வந்து அல்லது 'இயேசு விடுவிக்கிறார்' ஊழியங்கள் மூலம் நடத்தப்படும் கூட்டங்களில் நீங்கள் கொடுக்கும் காணிக்கைகளுக்கு முறையான இரசீது கொடுக்கப்படும்.

வங்கிக்கணக்கில் நேரடியாக பணம் செலுத்துபவர்கள் உங்கள் முழு விபரங்களை எமது கிளை அலுவலகத்தில் தொடர்பு கொண்டு அறிவித்தபின்னர் உங்கள் காணிக்கைக்கான இரசீது அனுப்பி வைக்கப்படும்.

'இயேசு விடுவிக்கிறார்' பெயரை பயன்படுத்தி அல்லது 'இயேசு விடுவிக்கிறார்' பத்திரிகைகளை கொண்டு வந்து யாரேனும் காணிக்கை சேகரிக்க வந்தால் அவர்களுக்கும் 'இயேசு விடுவிக்கிறார்' ஊழியங்களுக்கும் எந்வித தொடர்பும் இல்லை என்பதை இதன் மூலம் தெரியப்படுத்துகிறோம். - உங்கள் சகோதரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணத் தவறாதீர்கள்!

## தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்!



**ஏஞ்சல் டி.வியில்** (சனிக்கிழமை தவிர) தினமும் காலை 7:30 - 8:00, இரவு 11:30-12:00.

செவ்வாய் கிழமைதோறும் காலை 10:00 - 10:30.

வியாழக் கிழமைதோறும் இரவு 9:00 - 9:30.

சனிக் கிழமைதோறும் மதியம் 2:30 - 3:00.

**சுவர்க டி.வியில்** திங்கள், செவ்வாய், புதன், வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில், காலை மற்றும் இரவு 8:00 மணிக்கு.

**சுவர்க்கம் டி.வியில்** பாடல்கள், நாடகங்கள், சாட்சிகள் மற்றும் பல... தினமும் காலை மற்றும் இரவு 7:30 மணிக்கு.

**Dialog TVயில்** (God Channel) திங்கள் முதல், வெள்ளி வரை மதியம் 12:30 மணிக்கு.



**சகோ. மோகன் சி. லாசரஸ்** அவர்களின் தேவ செய்திகளைக் கேட்டு, ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்!

PRINTED BY S. A. PRINTERS, 57/3, LOTUS GROVE, THIMBIRIGASYAYE, HENDALA
Registered in the Department of Posts of Sri Lanka under QD/102/News/2106

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org